Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வு நெறி முறைக் குறிப்புகள்



கி. இராசா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the Compliments of the Department of Education, Government of India, New Delhi.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
DONATION

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வு நெறிமுறைக் குறிப்புகள்

DONATION

8140

கி. இராசா, எம். ஏ., பிஎச். டி.,
தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பார்த்திபன் பதிப்பகம்
மதுரை
1990

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Aaraaychi Nerimurai Kurippugal (Research Methodology)**
Author	:	Dr. K. RAJA, B. Sc., M.A., Ph. D.
Publishers	:	M/s. Parthibban Pathippagam, 12, Commanding Officer Lane II, West Masi Street, Madurai-625 001.
Language	:	Tamil
Subject	:	Research Methodology
Edition	:	First
Date of Publication	:	29-4-1990
Copy righa	:	R. Parthibban
Paper	:	7.2 Kg. White Printing
Size	:	1 x 8 Demmy
Types	:	10pt & 12pt.
Pages	:	vi + 78
Price	:	Rs. 12/-
Printers	:	M/s. Reliance Press, 192, Chinnakkadai Street. Madurai-625 001
Binding	:	Card Board
Call No.,	:	031, b4, NO

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டுத் தொடக்கநாள் நினைவாக (29-4-90) வெளியிடப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

நன்றியுரை

அணிந்துரை

★ ஆய்வு அறிமுகம் 1

ஆய்வு என்றால் என்ன? — ஆய்வாளரின் தகுதிகள்

★ ஆய்வுத்திட்டம் 5

★ ஆய்வுத்தலைப்பு 6

ஆய்வுச்சிக்கல்—முன் ஆய்வுகளை அறிதல்—தலைப்பைத் தேர்ந்தெடுக்குமுன் நூல்களைப் படித்தல் — தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்

★ நூலகங்களைப் பயன்படுத்துதல் 12

நூல்களின் வகைபாடு — கோலன்முறை—டூவிமுறை — லைப்ரரி ஆப் காங்கிரசு முறை—வகை எண் — நூல் எண்

★ குறிப்புகள் எடுத்தல் 18

★ ஆய்வேடு 35

முகப்புப்பக்கம்—மேற்பார்வையாளர் சான்றிதழ்—ஆய்வாளர் உறுதிமொழி—ஆய்வேட்டைப் பயன்படுத்த உதவும் குறிப்புகள்—பொருளடக்கம் —அட்டவணைகள் முதலானவை—சுருக்கக் குறியீட்டு விளக்கம்—ஆய்வு முன்னுரை —ஆய்வின் பொருட் பொதிவு—துணைநூற்பட்டியல்—பின்னிணைப்புகள் —கலைச்சொல்திரல்

★ தட்டச்சுக் குறிப்புகள் 73

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்றியுரை

தமிழின் வருங்கால வளர்ச்சிக்கேற்ற திட்டங்களைத் தந்து எம்மைச் செயல்பட வைப்பவர் எம் துணைவேந்தர் முனைவர் ச. முத்துக்குமரன் அவர்கள். தமிழின்பால் அவர் காட்டும் அக்கறையும் ஆர்வமும் எம்மை இதுபோன்ற பணிகளில் ஈடுபடத் தூண்டுகின்றன. அன்னார்க்கு என் நெஞ்சார்ந்த நன்றி. செயல்திறனைப் போற்றுபவர் எம் துறைத்தலைவர் முனைவர் மா. இராமலிங்கம் அவர்கள். துறை வளர்ச்சிக்கு நாளும் உழைக்கவேண்டும் என்று அவர் எமக்கு வழங்குகின்ற அறிவுரையே இந்நூல் எழுவதற்கு அடிப்படையாயிற்று. அறிவுரையின் தொடர்ச்சியாக இந்நூலுக்கு அணிந்துரையும் வழங்கியுள்ளார். அவர்க்கு என் இதய நன்றிகள் மிகப்பல. நூலகங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாகவும், வகை எண், நூல்எண் குறித்தும் மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகத் தொழில்நுட்பனர்கள் திரு.ஏ.ஆர்.பாலசுப்பிரமணியம், திரு.பொன் அலங்காரபாபு ஆகியோர் தெளிவுபடுத்தினார்கள். இருவர்க்கும் நான் நன்றியேன். ஆய்வேட்டின் பகுதிகள் பலவற்றுக்கும் சான்றுகள் தருவதற்காக, பட்டம் வழங்கப்பட்ட ஆய்வேடுகள் பயன்பட்டன. இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள இசைவு தந்த அறிஞர் பெருமக்கட்கும் என் நன்றி என்றும் உரித்து.

—கி. இராசா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

முனைவர் மா. இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி
(எழில் முதல்வன்)
தமிழ்த்துறைத்தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி
29-4-1990

முன்பெல்லாம் தமிழுலகில் நிரம்பப் படித்தவர்கள் ஆய்வு செய்தனர்; இப்போதோ ஆய்வு செய்வதற்காகவே நிரம்பப் படிக்கிறோம். முன்பெல்லாம் ஆய்வு நூல்களைக் கற்று ஆய்வுமுறை இதுவென அறிந்து கொண்டோம்; இப்போதோ ஆய்வு முறையை முதலில் கற்றுக் கொண்டு ஆய்வில் நுழைகிறோம். எல்லாம் காலப்போக்கில் நிகழ்கின்ற மாற்றங்கள். போகிற போக்கைப் பார்த்தால் ஆய்வுக் கல்வியே அடிப்படைக் கல்வியாய் எதிர்காலத்தில் எண்ணப்படலாம். கால மாற்றத்தால் தேவைகள் பெருகப் பெருக அதை நிறைவு செய்ய புதுப்புது நூல்கள் தோன்றுவது இயற்கைதானே?

இளவல் முனைவர் கி. இராசா எங்கள் துறையில் பணியாற்றும் நல்லாசிரியர். இங்கு வருவதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே இவரது எழுத்தாற்றலையும் ஆய்வுத்திறனையும் நான் கண்டு கொண்டவன் புதுப் புதுத் துறைகளில் நூல்கள் பல எழுதியுள்ள இவர் இப்போது ஆய்வு நெறிமுறைகளை உணர்த்தும் போக்கில் இந்நூலை எழுதியுள்ளார். இத்துறையில் இதுகாறும் வந்துள்ள நூல்கள் பலவற்றுள் இந்நூல் தனியிடம் பெறுகின்றது. ஆய்வுநெறிமுறை நூல்களில் இதுகாறும் குறிப்பிடப் படாத சில செய்திகளை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். நூலக எண்ணையும், வகை எண்ணையும் கொண்டு நூலின் முழு விவரத்தை அறியும் முறை, புதிய நூலுக்கு வகைஎண், நூலகஎண், இடும்முறை, தட்டச்சுச் செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய குறிப்புகள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வேட்டை எழுதும் போது வழக்கமாக நேரும் தவறுகளுக்குச் சான்றுகள் தந்து அவற்றைத் தவிர்க்க அறிவுறுத்தும் முறை ஆகியன இந்நூலில் காணலாகும் புதிய செய்திகளுள் சிலவாகும். ஆய்வேட்டின் ஒவ்வொரு பகுதியையும் எவ்வாறு செம்மையுற எழுதுவது என்ப தற்குச் சான்றுகள் தந்து விளக்கியுள்ளமை புதிய முயற்சி யாகும். எம்.ஃபில், பிஎச்.டி ஆய்வு மாணவர்களுக்கு இந்நூல் உற்ற துணையாக விளங்க வல்லது எனக் கருதுகின்றேன். மேலும் நூல்கள் பல படைக்க நூலாசிரியரை வாழ்த்துகின்றேன். தமிழுலகம் இவரைப் பயன் கொள்ளுமாக.

அன்பன்,
மா. இராமலிங்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"புதிய உண்மைகள்—புதிய / பழைய உண்மைகட்கு இடையே உள்ள உறவுகள் பற்றிய விளக்கங்களே ஆய்வின் பயன்" [1]

[stamp]

ஆய்வு அறிமுகம்

ஆய்வு என்பது ஓர் இனிமையான அனுபவம். ஆழ் கடலின் அடியில் ஆய்வுகளை நிகழ்த்துவோரும், இமயத்தின் உச்சியை எட்டியோரும் அடையும் இனிய அனுபவத்தினை ஆய்வில் தோய்வோரும் அடைய இயலும். கேள்விகளின் வழியாக ஆய்வுகள் மலர்கின்றன; ஆய்வின் விளைவாக அறிவு மலர்கிறது; அறிவின் முதிர்ச்சியாக நாகரிகம் தழைக்கிறது. பண்டைய கற்காலம் முதல் இன்றைய கணிப்பொறிக் காலம் வரை கேள்விகளாலேயே உலகம் முன்னேறி வந்துள்ளது. ஏன்? (Why), எப்படி? (How) என்ற இருவகைக் கேள்விகளே எல்லாக் கேள்விகளுக்கும் அடிப்படையானவை எனலாம். ஆய்வும் அறிவும் இக்கேள்விகளாலேயே மலர்கின்றன; வளர்கின்றன. 'பூமி ஏன் சுற்றுகிறது?' என்பதை அறிய முற்பட்டவர் தத்துவ அறிஞர் ஆயினர். 'பூமி எப்படி சுற்றுகிறது? என்பதைக் காண முற்பட்டவர் அறிவியல் அறிஞர் ஆயினர்.

உள்ளத்திற்கு ஒளியையும், வாழ்க்கைக்கு வழியையும் தருவது ஆய்வாகும். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'[2] எனும் பாரதியாரின் கவிதை வரிகள் இங்கு நினைத்துப் பார்ப்பதற்கு உரியன. ஆய்வில் தோய்வோர் சில நெறிமுறைகளைப் பின்பற்றுவதால் உள்ளம் தானாக ஒளி பெறுகிறது. அதுவே வாழ்க்கையில் சில நெறி முறைகளைப் பின்பற்றி ஒழுக வேண்டிய பண்பினையும் அவர்க்குக் கற்றுத் தருகிறது.

"ஓய்தல் ஆய்தல் நிகழ்த்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"
—தொல். சொல். 330

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனும் தொல்காப்பிய நூற்பாவில் ஆய்வின் இலக்கணத்தைக் காணலாம். ஆய்தல் என்பது 'உள்ளதன் நுணுக்கம்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ஆய்தொடி, ஆயிழை போன்ற இலக்கிய வழக்குகளை நாமறிவோம். இவை நுணுக்கமான வேலைப்பாடமைந்த அணிகலன்களைச் சுட்டுகின்றன.

ஆய்வினை ஆங்கிலத்தில் (Research) என்பர். இச்சொல் Researcher (to search) என்ற பிரெஞ்சுச் சொல்லிலிருந்து உருவானது. ஆய்வு என்பதற்கு விரிவான விளக்கங்கள் பலவற்றை மேலை நாட்டார் தந்துள்ளனர். அவற்றுள் சில வருமாறு:

"குறிப்பிட்ட சில நெறிமுறைகளின் அடிப்படையில், தேவையான சான்றாதாரங்களின் துணையுடன் ஓர் உண்மையைக் கவனமாகவும் ஆழமாகவும் தேடும் முயற்சியே ஆய்வாகும்"[3]

"அறிவுபூர்வமாக, மிகப்பரந்த முறையில், உண்மையாக மெய்ம்மைகளைத் தேடும் முயற்சியே ஆய்வு. இதன் மூலம் பெறப்பட்ட சோதித்தறியப்படும் தகுதிவாய்ந்த உண்மைகள் (verifiable facts) அறிவுலகிற்குக் கொடையாகத் (contribution to the knowledge) திகழ்தல் வேண்டும்."[4]

"வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி ஒரு சிக்கலைத் தீர்க்க உதவும் முறையான சிந்தனையே (systematic and refined technique of thinking) ஆய்வு. இச்சிந்தனை, சிக்கலில் தொடங்கி, மெய்ம்மைகளைத் தொகுத்து, அவற்றைச் சோதித்துத் திறனாய்வு செய்து, அவற்றின் அடிப்படையில் உண்மைகளைக் காண்பதில் முடிகிறது"[5]

சுருங்கக்கூறின், 'உண்மைகளை மிக்கக் கவனத்தோடும் விடாமுயற்சியோடும் நுட்பமாகத் தேடும் முயற்சியையே 'ஆய்வு' எனலாம்.

ஆய்வாளரின் தகுதிகள்

உண்மைகளை மேலும் மேலும் காண விழையும் ஆர்வமனம் ஆய்வாளருக்கு வேண்டற்பாலதாகும். போதுமென்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனம் அவருக்குக் கூடாது. ஆய்வாளர், இசையை உருவாக்கு பவராக (Composer) இருத்தல் வேண்டும்; இசையை மீட்டு பவராக (Fiddler) இருத்தல் கூடாது. எதிர்காலத்தின் எதிர் பார்ப்புக்குத் தக்கவாறு ஆய்வாளர் தம்மை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். பழம் பெருமையை எண்ணிப் பெருமிதம் கொள்பவராக அவர் இருத்தலாகாது.

ஆய்வில் நுழைந்துவிட்டால் ஆய்வு நாகரிகத்தைப் பேண வேண்டும்; உழைப்புக்கு முதலிடம் தருதல் வேண்டும். பிறர் கருத்தைத் தம் கருத்துப் போல ஆய்வாளர் குறித்து விடுதல் கூடாது. கருத்தைத் திருடுவது (Plagiarism) என்பது அறிவைத் திருடுவதற்கு ஒப்பாகும். மாறுபட்ட கருத்துக்களை மறுப்பதிலும் நாகரிகம் போற்றப்பட வேண்டும். 'தவறுதலாக எழுதியுள்ளார்' என்றோ, 'முற்றிலும் பிழை' என்றோ குறிப்பது கூடாது. ஒருவர் கூறிய கருத்தை மறுத்துரைக்கும் பண்பிற்குப் பின்வரும் பகுதியைச் சான்றாகக் காட்டலாம்:

> "அக இலக்கியச் சான்றுகளையும் முன்னோர் உரை மரபுகளையும் ஆராயின் 'எற்பாடு' என்பதைப் பகலின் பிற்கூறாகக் (பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை) கொள்ளுதலே பொருத்தமாம். விடிபொழுதை விட மடி பொழுதே மகளிரை மயக்கும். ஆதலின் எல்விழுபொழுதே, நெய்தற்பொழுது; எல் எழு பொழுது அன்று"[6]

ஆய்வில் செருக்குக் கூடாது. அஃது உடம்பை அரிக்கும் எலும்புருக்கி நோய் போன்றது; அறிவு என்னும் கொழுந்தைப் பொசுக்கும் நெருப்புப் போன்றது. முன்பு காணப்படாத ஓர் உண்மையைக் கண்டு சொல்ல முற்படுவதுதான் ஆய்வின் சிறப்பு என்றாலும், "இதுபோல ஒருண்மை எங்குமில்லை காண!" என்ற தன் முனைப்பு ஆய்வில் கூடாது.

> "... எனவே பழைய நாகரிக நாடுகளின் வரலாறுகளைக் கொண்டு ஆராயுழி, தொல்காப்பியர் காலத்து அடிமையர் இருந்தனர் என்று கொள்ளுதலே பொருத்தம் எனத் தோற்றுகிறது"[7]

என்பது போன்று ஆய்வில் கண்ட உண்மைகளை அடக்கமாக எடுத்துரைக்கும் பண்பு வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னார், இனியர் என்ற வேறுபாட்டை ஆய்வில் காட்டலாகாது. விருப்பு வெறுப்பற்ற சமநிலைப் போக்கே ஆய்வை வளர்க்கும்; வளமாக்கும். ஒருவர் வடமொழி அறிவு மிக்கவர் என்பதற்காக அவர் செய்த தமிழ் இலக்கிய ஆய்வுகளை ஒதுக்கிவிடலாகாது. இருமொழி இலக்கிய அறிவின் வாயிலாகச் செம்மையான இலக்கிய ஆய்வுகள் மலர வாய்ப்புள்ளதை மனதிற் கொள்ள வேண்டும். பாரதியார் தம் கண்களை மூடிக் கொண்டு கம்பனைப் போற்றவில்லை. பன்மொழித் திறத்தால் தம் அறிவின் வாயிலைத் திறந்துவைத்து "யாமறிந்த புலவரிலே..." என்று கம்பனையும் இளங்கோவையும் பிறமொழிப் புலவர்களுடன் ஒப்புநோக்கிச் சிறப்பித்தார் அன்றோ? இன்றைய இலக்கிய உற்பத்தி வேகத்தில் இத்தகைய சீர்தூக்கும் ஆய்வுகளே நிலைக்கவல்லன.

குறிப்புகள் :

ஒவ்வோர் இயலின் தொடக்கத்திலும் இடம்பெறும் இக் குறிப்புகள்

1. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 7-6-1983 அன்று நடைபெற்ற ஆய்வு நெறியாளர் கருத்தரங்கில் ஆற்றிய உரையிலிருந்து எடுத்தாளப் பெற்றுள்ளன.
2. மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தேசிய கீதங்கள் : தமிழ்நாடு (தமிழ்)
3. Almac, John C., Research and Thesis Writing, Houghton Mifflin Company, New York, 1930, p. 11
4. Whitney. F.C., Elements of Research, Asia Publishing House, Bombay, 1961, p. 21
5. Ibid
6. அறவாணன், க. ப., அற்றைநாட் காதலும் வீரமும், பாரி நிலையம், சென்னை. ப. 107.
7. மேலது, ப. 114

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஒவ்வோர் ஆய்வும் ஓர் அறைகூவல் / சாதனை ஆகும் போதே ஆய்வு ஊக்கமும் உயர்வும் பெறும்"

ஆய்வுத் திட்டம்

The Plan

1. ஈடுபாடுள்ள துறையைத் தேர்ந்தெடுத்தல்
2. தேர்ந்தெடுத்தத் துறையில் ஒரு சிக்கலை ஆய்வுப் பொருளாகக் கொள்ளுதல்
3. சிக்கல் தொடர்பான குறிப்புகளைத் தேடித் தொகுத்தல்
4. தொகுத்தக் குறிப்புகளை வரன்முறைப் படுத்துதல்
5. ஆய்வு நெறிமுறைகளைப் பின்பற்றியும், குறிப்புகளைப் பயன்படுத்தியும் ஆய்வின் முன் வரைவினை (first draft) எழுதுதல்
6. ஆய்வின் முன்வரைவினை அவ்வப்பொழுது மேற்பார்வையாளருக்குக் காட்டித் திருத்திக் கொள்ளுதல்
7. மேற்பார்வையாளரின் திருத்தங்களுக்கேற்ப ஆய்வின் முன்வரைவினைச் செம்மை செய்தல் (final draft)
8. செம்மை செய்த ஆய்வேட்டினைத் தட்டச்சுச் செய்தல் (rough type)
9. தட்டச்சுப் பிழைகளையும், ஒற்றுப் பிழை, சந்திப்பிழை, ஒருமை-பன்மை மயக்கம், சொற்றொடரமைப்புப் பிழை போன்றவற்றைத் திருத்தி, குறிப்புகளைச் சரிபார்த்து ஒப்புநோக்கி, ஆய்வேட்டின் அமைப்பினை ஒழுங்கு செய்து இறுதிவடிவம் கொடுத்தல்
10. ஒழுங்கு செய்த ஆய்வேட்டினைத் தட்டச்சு செய்தல் (fair type)
11. இறுதி வடிவம் பெற்ற ஆய்வேட்டினை முறைப்படி பைண்டிங் செய்து அனைத்தும் ஒழுங்காக உள்ளனவா எனச் சரிபார்த்துப் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்க ஆயத்தம் செய்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"புதிய உண்மைகளையும், அவற்றின் உறவுகளையும் விளக்கங்களையும் தரத்தக்க தலைப்புகளும் சமூகத்திற்குப் பயனுடைய தலைப்புகளுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும். வெறும் தொகுப்பு (Summary) ஆய்வுகள் கூடா"

ஆய்வுத் தலைப்பு
The Problem

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சிக்கலே ஆய்வுத் தலைப்பு எனப்படும். ஆங்கிலத்தில் இதனைச் 'சிக்கல்' (The Problem) என்றே குறிப்பிடுகின்றனர். இது 'ப்ரோபல்லீன்' (Proballein: anything thrown forward) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. ஆய்வு செய்வதற்கு விருப்பமான துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டபின் ஆய்வு செய்வதற்குரிய தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தலைப்பைத் தேர்வதிலேயே ஆய்வின் பாதி வெற்றி அடங்கியிருக்கிறது எனலாம். தலைப்பை ஆய்வாளர் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்வதுண்டு; ஆய்வு நெறியாளர் தலைப்பைத் தேர்ந்தெடுத்துத் தருவதுண்டு; ஆய்வு நெறியாளரும் ஆய்வாளரும் கலந்து முடிவு செய்வதும் உண்டு.

ஆய்வாளர் தாமே தலைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதிலும் ஆய்வு நெறியாளர் தாமே தலைப்பைத் தருவதிலும் சில இடர்ப்பாடுகள் உள்ளன. ஆய்வுலகில் புதியதாக நுழையும் ஆய்வாளர் ஆய்வுத் தலைப்பிற்கும், ஆய்வு செய்வதற்கு வரையறுக்கப்பட்ட கால எல்லைக்கும் (3-4 ஆண்டுகள்) உள்ள தொடர்பினை அறியார். எனவே அவர் தேர்ந்தெடுக்கும் தலைப்பு குறுகிய காலத்திற்குள் (2 ஆண்டுகள்) முடித்துவிடக் கூடியதாகவோ, நீண்ட காலத்திற்குச் செய்ய வேண்டிய பரப்புடையதாகவோ (5-6 ஆண்டுகள்) அமைந்துவிட வாய்ப்பு உண்டு. மேலும் ஆய்வு செய்யத் தேர்ந்தெடுத்துள்ள துறையில் இதுகாறும் செய்யப்பட்ட ஆய்வுகளைப் பற்றி ஆய்வாளர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகம் அறியார். இதனால் ஆய்வுகள் ஒன்றைப் போல் ஒன்று அமைந்துவிட இடமுள்ளது.

ஆய்வுக்குரிய தலைப்பை ஆய்வாளர் தேர்ந்தெடுத்துத் தரும்போது, விரும்பாத தலைப்பில் ஆய்வாளர் வேண்டா விருப்பாக ஆய்வு செய்ய நேரிடும். புதுக்கவிதைகளில் பிடிப்புடையோர் புறநானூறு, அகநானூறு ஆய்வுகளையும், புதினங்களில் பற்றுடையோர் உள்ளுறை, இறைச்சி ஆய்வுகளையும் வலிந்து மேற்கொண்டு மெலிந்து போயிருப்பதைக் காணலாம். ஆய்வு நெறியாளரிடம் தம் உள்ளக்கருத்தை எடுத்து வைக்காமல் ஏதோவொன்றை ஏற்றுக் கொள்வதால்தான் ஆய்வாளருக்கு இத்தகு இடர்ப்பாடுகள் நேரிடுகின்றன. இதனால்தான் ஆய்வு நெறியாளரும் ஆய்வாளரும் பல்வேறு தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து விவாதித்துப் பின்னர் அவற்றுள் ஒன்றை முடிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றனர்.

ஆய்வு நெறியாளரும் ஆய்வாளர்களும் சூரியக்குடும்பம் போலாவார்கள். ஆய்வு நெறியாளர் சூரியனாக இருந்துகொண்டு தம்கீழ் ஆய்வு நிகழ்த்தும் அனைத்து ஆய்வாளர்களையும் நெறிமுறைப்படுத்துகிறார். சூரியனின் இயக்காற்றலால் இயங்கும் கோள்கள் தம்மைத் தாமே சுற்றிக் கொள்வது போல ஆய்வாளர்கள் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கு வாய்ப்புண்டு. ஆயின் அச்சிந்தனைகள் வரன்முறை பிறழாமல் — தறிகெட்டு ஓடாமல் — ஆய்வு நெறியாளர் கட்டுப்படுத்துகிறார். இவ்வாறு ஆய்வு நெறியாளருக்கும் ஆய்வாளருக்கும் உள்ள இன்றியமையாத் தொடர்பினை இருவரும் உணர்தல் வேண்டும். இவ்வுணர்வே ஆய்வினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

"உன் நண்பனைச் சொல்; உன்னைப் பற்றிச் சொல்கிறேன்" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "உன் தலைப்பைச் சொல்; உன்னைப் பற்றிச் சொல்கிறேன்!" என்று ஆய்வுலகில் புதுமொழி படைக்கலாம். அந்த அளவிற்கு ஆய்வாளரை இனங்காட்டும் துணையாகத் தலைப்புக் கருதப்படுகிறது. தலைப்புகளுக்காக ஆய்வுகள் அன்று; ஆய்வுகளுக்காகவே தலைப்புகள் என்பதை அறிய வேண்டும்.

ஆய்வுத்தலைப்பு ஏதேனும் ஒரு சிக்கலை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். நாம் 'ஆய்வுத் தலைப்பு' (Title)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை ஆங்கிலத்தில் 'ஆய்வுச்சிக்கல்' (The Problem) என்றே குறிப்பிடுகின்றனர். சிக்கலே தலைப்பாக வேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா?

சிக்கல், தலைப்பாக வேண்டுமேயொழிய தலைப்பே சிக்கலாகிவிடக் கூடாது.

> "பாரதிதாசன் பாடல்களில் பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு"
>
> "மு. வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்"
>
> "லட்சுமி நாவல்களில் பெண்களின் பிரச்சனைகளும் உரிமைகளும்"

என்பன போன்று தலைப்புகள் குறிப்பாகவும் தெளிவாகவும் அமைய வேண்டும். பல சிக்கல்களை ஒரே தலைப்பில் திணிப்பதும், நீண்ட தொடர்களினால் தலைப்பை நீட்டுவதும், குழப்பம் நிறைந்த தலைப்பைத் தேர்ந்தெடுப்பதும் தலைப்பே சிக்கலாகிவிட வழிவகுக்கும். தலைப்புகள் பொதுவாகவோ, காலஎல்லையை மனத்திற் கொள்ளாமலோ, தலைப்புக்காகத் தலைப்பு (Pedantic) என்றோ அமைந்து விடுதல் கூடாது. தமிழ் நாவல்கள், தமிழ் நாவல் வளர்ச்சி, சங்க இலக்கியம், காப்பியங்கள் என்பன பி.எச்.டி பட்ட ஆய்வுத் தலைப்பு களாகப் (தமிழியல் ஆய்வு, 1988) பதிவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறேனும் எழுதி, எவற்றையேனும் முடிவுகளாகச் சுட்டலாம் என்ற ஆய்வாளரின் கட்டுப்பாடற்ற தன்மையை இத்தலைப்புகள் காட்டுகின்றனவன்றோ!

தலைப்புகளைக் கால உணர்வோடு வரையறுத்துக் கொள்வதிலும் ஆய்வாளர்க்குக் கவனம் தேவை. சங்க இலக்கியத்தில் ஈடுபாடுள்ள ஒருவர், 'சங்க காலச் சமுதாயம்', 'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' 'சங்க இலக்கியத்தில் பொழுது வருணனைகள்' முதலிய மூன்று தலைப்புகளில் ஒன்றைப் பி.எச்.டி ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்க விழைகிறார் என்று வைத்துக் கொள்வோம். 'சங்ககாலச் சமுதாயம்' எனும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்த அவர் சங்கப் பாடல்களை மட்டும் பார்ப்பது போதாது. குகைக் கோயில்கள், குடைவரைக் கோயில் கள், கல்வெட்டுகள், நடுகற்கள், செப்பேடுகள், பட்டயங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்றவற்றை ஆராய வேண்டும். மேலும் சங்க காலத்தில் நிலவிய பல்வேறு தொழில்கள், வணிக முறைகள், கலைகள் முதலியவை பற்றியும் அவர் அறிந்திருத்தல் வேண்டும். இதனைத் தம் வாழ்நாள் முழுதும் தமிழுக்குச் செய்யும் தொண்டாகக் கருதித் தொடர் கட்டுரை எழுதலாமே ஒழிய ஆய்வாக முதிர்ச்சி பெறாது.

'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' என்ற தலைப்பிற்குரிய செய்திகளைத் தேட முற்படும்போது அஃது ஓராண்டிற்குள் முடித்துவிடக் கூடிய எம்ஃபில் ஆய்வுக்கேற்ற தலைப்பு என்பதை ஆய்வாளர் அறிந்து கொள்வார். இதேபோன்று 'சங்க இலக்கியத்தில் பொழுது வருணனைகள்' என்ற தலைப்புக்கான சான்றுகளைத் தொகுக்க முற்படும்போது அது குறிப்பிட்ட காலத்திற்குள் (3-4 ஆண்டுகள்) முடிக்கக்கூடிய பிஎச்.டி பட்டத்திற்குரிய ஆய்வுத்தலைப்பாக அமைவதை ஆய்வாளர் உணர்ந்து கொள்வார். எனவே செய்திகள் எந்த அளவிற்குக் கிடைக்கின்றன என்று அறிந்து கொள்ளுதலும் தலைப்புத் தேர்வில் முக்கியமாகக் கவனிக்கத்தக்கதாகும்.

முன் ஆய்வுகளை அறிதல்

தலைப்பை முடிவு செய்வதற்கு முன்பாகவே, தேர்வு செய்து வைததுள்ள தலைப்பில் முன் ஆய்வுகள் ஏதும் நிகழ்ந்தனவா? எனக் கண்டறிதல் இன்றியமையாததாகும். இத்தகு நோக்கு இல்லாமையால் ஒரே தலைப்பில் பல ஆய்வுகளும், ஒரே நோக்குள்ள ஆய்வுகளும் பெருக வாய்ப்புண்டு. சான்றாகத் தமிழ் இலக்கியக் கொள்கைகள் என்ற தலைப்பினைக் குறிப்பிடலாம்:

தமிழ் இலக்கியக் கொள்கைகள்

தமிழ் இலக்கியக் கொள்கைகள் - சங்க காலம்

தமிழ் இலக்கியக் கொள்கைகள்-சிறப்பாகத் தொல்காப்பியம்

இதுபோன்றே நற்றிணையிலும்

நற்றிணையில் அகத்திணைக் கோட்பாடுகள்

நற்றிணை ஒரு திறனாய்வு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியமும் நற்றிணையும்

நற்றிணை-பொருளதிகார அடிப்படையில்

நற்றிணை - ஓர் ஆய்வு

நற்றிணை - ஓர் ஆய்வு

போன்ற தலைப்புகளில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன தலைப்பைப் பதிவு செய்யும் முன்னரேயே இவற்றை அறிந்து கொள்வதால், ஆய்வாளரின் நோக்கு பிறரது நோக்கிலிருந்து வேறுபட்டு அவரது தனித்தன்மைப் புலனாக வாய்ப்புகளுண்டு.

தலைப்பைத் தேர்ந்தெடுக்கு முன் நூல்களைப் படித்தல்
Preliminary reading

தலைப்பைத் நேர்ந்தெடுக்குமுன் அத்தலைப்புத் தொடர் பான பல நூல்களையும் முந்தைய ஆய்வேடுகளையும் பயிலுதல் இன்றியமையாததாகும். ஆய்வுக்குத் தேவைப்படும் குறிப்புகள் போதிய அளவில் உள்ளன என்றும், ஆய்வில் எந்த அளவுக்கு ஆழம் காண முடியும் என்றும் அறிவதற்கு இஃது உதவும். படித்த நூல்களின் விவர அட்டவணை (Descriptive Catalogue) ஒன்றை ஆயத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் தலைப்பைப் பதிவு செய்த பின்னர் மீண்டும் அதே நூல்களைத் தேடவேண்டிய இடர்ப்பாடு பெருமளவில் குறையும்.

தேவையான நூல்கள் கிடைக்கும் என்ற நிறைவு ஏற்பட்ட வுடன் ஆய்வின் நோக்கம், கருதுகோள், அணுகுமுறை, இயல் களின் (உத்தேசத்) தலைப்பு, அவற்றுள் அடங்கும் செய்தி களின் குறிப்புகள், இவ் ஆய்வின் மூலம் எத்தகு உண்மைகள்/ முடிவுகள் புலப்பட வாய்ப்புள்ளன என்பது பற்றிய சுருக்கம் போன்றவற்றை எழுதிக் கொள்ள வேண்டும். ஆய்வுத் தலைப்பைப் பதிவு செய்யும் போது ஆய்வுச் சுருக்கத்தையும் உடன்தரவேண்டும் என்று சில பல்கலைக்கழகங்கள் விதி வகுத்துள்ளன. மேலும் ஆய்வாளருக்கு ஆய்வில் தெளிவையும் நம்பிக்கையையும் தருவதற்கும் இவ்ஆய்வுச் சுருக்கம் பயன்படும்.

ஆய்வுக்குத் துணை நிற்கக் கூடிய எல்லா நூல்களும் இருந்த இடத்திலேயே கிடைத்துவிடும் என்று சொல்லவியலாது. ஆய்வுக்கு இன்றியமையாத ஒரு நூலை ஆய்வாளர் குறிப்பிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில்லை என்ற ஒரே காரணத்திற்காகத் திருப்பியனுப்பப்பட்ட ஆய்வேடுகளும் உள்ளன. பாரதியாரைப் பற்றி ஆய்வு செய்யும் ஒருவர், அவரது நூல்களும் எழுத்துக்களும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள கல்கத்தா தேசிய நூலகத்திற்குச் செல்ல வில்லையென்றால் ஆய்வு சிறக்காது. ஜி. யூ. போப் பற்றி ஆய்வு செய்பவர் அவர்தம் கையெழுத்துப் பிரதிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சாயர்புரம் போப் கல்லூரிக்குச் (தூத்துக்குடி) சென்று அதைப் பார்வையிடவில்லையென்றால் அவர்தம் ஆய்வு குறைவுடையதேயாகும். பழுமரம் தேடும் பறவைகளைப் போல ஆய்வாளர் நூல்களைத் தேடிச் சென்று பயன்பெற வேண்டும். ஆய்வாளர்களுக்கு நூலகங்கள் ஆலயங்கள் போன்றன.

இலக்கியம் சார்ந்த ஆய்வுகளாயின் நூல்களைத் தேடிப் பிடித்துக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரேயே குறிப்புகளை எடுத்துமுடிக்க வாய்ப்புண்டு. ஆயின் நாட்டுப்புறவியல் சார்ந்த —குறிப்பாகத் திருவிழாக்கள், சமயம், வழிபாடு, சடங்குகள் பற்றிய ஆய்வுகளில் ஆண்டுக்கொரு முறை நடக்கும் திருவிழா, சடங்குகளுக்காக ஆய்வாளர் காத்திருக்க நேரிடும். இவ்வேளை யில் கள ஆய்வுச் செய்திகளைத் தவிர, ஆய்வுக்குத் துணையாகும் பிற செய்திகளை ஆய்வாளர் தொகுத்து வைத்துக் கொள்ளலாம்.

ஆய்வாளருக்குக் காலத்தின் மீது கவலை வேண்டும்; காலம் கண் போன்றது என்ற உணர்வு வேண்டும். இளமை கழிவதற்கு இரங்குவது போல, காலம் கழிவதற்கும் ஆய்வாளர் இரங்குதல் வேண்டும். இவ்வுணர்வு இருப்பின் வகுத்தத் திட்டத் திற்கேற்பக் குறித்த காலத்தில் ஆய்வை முடிக்கலாம்.

முதலாமாண்டு —தலைப்பிற்குத் தொடர்பான நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்தல்

இரண்டாமாண்டு—எடுத்த குறிப்புகளைக் கொண்டு ஆய்வேட் டின் முன்வரைவினை ஆயத்தம் செய்தல்

மூன்றாமாண்டு — முன் வரைவினைச் சீர்திருத்தி, பிழைதிருத்தி, இறுதி வடிவம் கொடுத்தல்

இவ்வாறு மூன்றாண்டுக் காலத்திற்கு முன்கூட்டியே திட்டம் வகுத்து அதன்படிச் செயல்பட்டால் ஆய்வு மலைப்பாக இராது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தமிழ் தொடர்பாக அமைக்கப்படும் பெரிய குறிப்புதவி நூலகத்திலும் விரிவான அட்டவணை—பல்வகை அடைவுப் பிரிவு (Bibliographical Section) ஒன்றை அறிஞர்களைக் கொண்டு அமைத்து ஆய்வுக்குறிப்புத் திரட்டுகளை உருவாக்கி ஆய்வாளர்களுக்குப் பயன்படுமாறு செய்ய வேண்டும்".

நூலகங்களைப் பயன்படுத்துதல்

நூலகங்கள் ஆலயங்கள் போன்றவை. ஆலயங்களின் பால் நமக்குள்ள மதிப்பும் அச்சமும் நூலகங்களைப் பயன் படுத்தும்போதும் தேவை. ஆலயங்களைத் தொழுவதற்கும் வலம் வருவதற்கும் சில நெறிமுறைகள் உள்ளது போன்று நூலகங்களைப் பயன்படுத்துவதற்குச் சில வழிமுறைகள் உள்ளன. இவற்றை அறிவோமாயின் நூலைத்தேடும் ஆய் வாளர்க்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற மயக்கமும் மாயையும் தோன்றா. ஆய்வுப்பணிகள் தட்டுத் தடங்கலின்றி முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு நூலகப் பயிற்சி மூலதனம் போன்றது.

நூலகங்களுக்கு நாள்தோறும் பல நூல்கள் வந்து கொண் டிருக்கின்றன. கட்டுக்குலைந்துபோன பழைய நூல்களும், பயன்பாட்டில் இருக்கும் இருப்பு நூல்களும், புதிதாக வந்து எண்ணிட்டுச் சேர்க்க வேண்டிய நூல்களும் முறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகைப்பாட்டை ஓரளவேனும் அறிவோமாயின் வேண்டும் நூல்களை எளிதாக அடையாளம் கண்டு பயன்படுத்த இயலும்.

நூல்களை வகைப்படுத்துவதற்கு,

அ. கோலன் முறை (Colon Classification)

ஆ. டெசிமல் முறை (Decimal Classification)

இ. லைப்ரேரி ஆப் காங்கிரஸ்முறை (Library of Congress Classification)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈ. யுனிவர்சல் டெசிமல் முறை (Universal Decimal Classification)

உ. பொருள்முறை (Subject Classification)

ஊ. நூல் விவர முறை (Bibliographical Classification)

ஆகிய வகைப்பாட்டு முறைகள் கையாளப்படுகின்றன.

அ. **கோலன்முறை :** இம்முறையில் நுவல் பொருளின் அடிப் படையில் நூல்கள் வகைப்படுத்தப்படுகின்றன. ஆங்கில எழுத்துக்களும், அராபிய எண்களும், குறிகளும், கிரேக்க எழுத்துக்களும் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

(எ-டு)	1. அறிவு உலகம்	A கணித அறிவியல்
	2. நூலகம்	—
	—	N நுண்கலைகள்
	4. இதழியல்	NZ இலக்கியமும் மொழியும்
	—	O இலக்கியம்
	8. மேலாண்மை இயல்	P மொழி
	9zz சமூக அறிவியல்கள்	

இவை மட்டுமன்றி, இவ்வகையில் பல துணைப்பிரிவு களும் உள்ளன.

(எ-டு) 1. காலவரிசை முறை (Chronological Device)

2. நிலவியல் முறை (Geographical Device)

3. பொருள் வழி முறை (Subject Device)

4. நினைவுக் குறிப்பு முறை (Memoric Device)

5. அகர வரிசை முறை (Alphabetical Device)

6. மொழிப் பிரிவு (Language Division)

7. இணைக் குறிகள் (Super Imposition Device)

கோலன் முறையில் ஒரு நூலுக்கு வகை எண் பின்வருமாறு வழங்கப்படுகின்றது.

நூலின் பெயர் : பாரதியார் பாடல்கள் (தொகுப்பு)

0 இலக்கியம்

03 திராவிட இலக்கியம்

031 தமிழ் இலக்கியம்

031 : 1 தமிழ் செய்யுள் இலக்கியம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் எண் : வகையெண்ணுக்குப் பின்னர் இடம்பெறுவது நூல் எண் ஆகும். நூல் எண்ணில், மொழி எண், ஆண்டு எண், நூலின் படி எண், தொகுதி எண், பிற்சேர்க்கை எண் (Supple ment number) ஆகிய பல விவரங்கள் அடங்குகின்றன.

மொழி எண் :

111	ஆங்கிலம்	31	தமிழ்
122	பிரெஞ்சு	32	மலையாளம்
—			
15	வடமொழி	33	கன்னடம்
152	இந்தி	35	தெலுங்கு
—			
3	திராவிட மொழிகள்	4	பிற ஆசிய மொழிகள்

ஆண்டு எண் :

A 1880 ஆம் ஆண்டுக்கு முன்னர்
B 1880—1889
C 1890—1899
—
K 1960—1969
—
M 1980—1989

படி எண் : (ஒரு படிக்கு மேல் இருக்குமெனில்)
1 : 2வது படி
2 : 3வது படி

தொகுதி எண் : நூல் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளாக இருக்குமாயின் நூல் எண்ணின் இறுதியில் ஒரு புள்ளியிட்டு அதன் பின்னர் குறிக்கப்படும்.

பிற்சேர்க்கை எண் : தொகுதி எண்ணின் இறுதியில் — எனும் கோடிட்டுக் குறிக்கப்படும்.

திறனாய்வு எண் : திறனாய்வு நூல்களுக்கு நூலின் எண்ணுக்குப் பின்னர் : g என்ற ஆங்கில எழுத்தால் குறிக்கப்படும்.

(எ-டு) சிலப்பதிகாரச் செய்தி 031, 1C 92 : gK3
0 இலக்கியம்
03 திராவிட இலக்கியம்
031 தமிழ் இலக்கியம்
031, 1 தமிழ் செய்யுள்
031, 1 c 92 இணைப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

031, 1 c 92 : g திறனாய்வு எண்

031, 1 c 92 : g k ஆண்டு எண் (1960—1969)

031, 1 c 92 : g k 3 படி எண் (நான்காவது படி)

ஆ. டூவி முறை : இது டெசிமல் முறை என்றும் அழைக்கப் படுகிறது. இம்முறையில் அனைத்துத் துறைகளும் பத்துப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :

000	பொதுப்பிரிவு	500	விஞ்ஞானம்
100	தத்துவம்	600	தொழில் நுட்பமும் பயனுறு கலைகளும்
200	சமயம்	700	நுண்கலைகள், பொழுது போக்குகள்
300	சமூகவியல்	800	இலக்கியம்
400	மொழியியல்	900	வரலாறு, உலக வரலாறு, வாழ்க்கை வரலாறு முதலியன.

இவை ஒவ்வொன்றும் நூறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அவையாவன :

000—099	பொது	500—599	அறிவியல்
100—199	தத்துவம்	600—699	தொழிலியல்
200—299	சமயம்	700—799	நுண்கலைகள்
300—399	சமூகவியல்	800—899	இலக்கியம்
400—499	மொழியியல்	900—999	வரலாறு

இவை ஒவ்வொன்றும் மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.

(எ-டு) 800 — பொது இலக்கியம்
810 — அமெரிக்க இலக்கியம்
820 — ஆங்கில இலக்கியம்
830 — ஜெர்மானிய இலக்கியம்
840 — பிரெஞ்சு இலக்கியம்
850 — இத்தாலிய இலக்கியம்
860 — ஸ்பானிய இலக்கியம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

870 — இலத்தீன் இலக்கியம்
880 — பண்டைய கிரேக்க இலக்கியம்
890 — பிற இலக்கியம்

இவற்றிலும் பல நுண் பகுப்புகளை டூவி கண்டுள்ளார்.

(எ-டு) 820 — ஆங்கிலப் பொது இலக்கியம்
821 — கவிதை
822 — நாடகம்
823 — நாவல்
824 — கட்டுரைகள்
825 சொற்பொழிவுகள்
826 கடிதங்கள்
827 அங்கதம், எள்ளல்
828 ஆங்கிலமும் பிற இலக்கியங்களும்
829 பழைய ஆங்கில இலக்கியங்கள்

பல்வேறு நுண்ணிய பகுப்புகளுக்கு இடந்தருவதும் எளிதில் நினைவில் வைத்துக் கொள்வதும் டூவி பகுப்பு முறையின் சிறப்புக்களாம்.

இ. லைப்ரரி ஆப் காங்கிரசு பகுப்பு முறை

இம்முறையில் அராபிய எண்களும் ஆங்கில எழுத்துக்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஆங்கில அகர வரிசையில் I, O, W, X, Y ஆகிய எழுத்துக்கள் இப்பகுப்பு முறையில் பயன்படுத்தப் படவில்லை. அவை பிறபகுப்புகளை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இம்முறையில் அடங்கும் பிரிவுகள் வருமாறு :

A பொதுநூல்கள்
B தத்துவம் — சமயம்
C வரலாறு — துணை அறிவியல்
D வரலாறு; நிலக்கிடக்கை முறை (Topography) அமெரிக்கா நீங்கலாக
E-F அமெரிக்கா
G புவியியல், மானிடவியல்
H சமூக அறிவியல்
J அரசியல் — அறிவியல்
K சட்டம்
L கல்வி
M இசை
N நுண்கலைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

P இலக்கியம், மொழி
Q அறிவியல்
R மருந்தியல்
S வேளாண்மை, பயிரின, உயிரினத் தொழில்கள்
T தொழில் நுட்பம்
U படைத்துறை அறிவியல்
V கடற்படை அறிவியல்
Z நூலக அறிவியல், நூல் விவரத் தொகுப்பு

இரு எண் முறைகளின் சேர்க்கையால் நூல்களுக்கு எண்கள் இடப்படுகின்றன. அவை :

1. வகை எண் (நூலின் நுவல் பொருள் அடிப்படையில்)
2. நூல் எண் (நூலைப் பற்றிய விவரக் குறிப்புகள்)
   i. நூல் வெளியான ஆண்டு : k 8 (1968)
   ii. நூலின் பிரதி (Copy) : 1 (இரண்டாவது பிரதி)
   iii. இணைப்பு நூல் (Supplement) —1 (நூலுக்கு முதல் இணைப்பு)
   iv. நூலின் தொகுதி (Volume) — .1 (முதல் தொகுதி)

நூல் : போர் மல்லர்கள் (The Gladiators)
ஆசிரியர் : ஜியார்ஜ் ஜான் மெல் விட் ஓவிட்
தமிழாக்கம் : என். கே. வேலன்
வெளியான ஆண்டு : 1968
நூலகம் : தெ. பொ. மீ. நூலகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
நூலக எண் : 0 : 3 m 21 : 11
31 k 8 ; 1

0 — ஆங்கில இலக்கியம்
0 : 3 — ஆங்கிலப் புதினம்
m 21 — ஆசிரியரின் பிறந்த ஆண்டு
: 11 — ஆசிரியரின் பதினோராவது நூல்
31 — தமிழ் மொழி பெயர்ப்பு
k 8 — நூல் வெளியான ஆண்டு
; 1 — நூலின் இரண்டாவது படி

வகை எண்ணின் விரிவும், ஆசிரியரின் பிறந்த ஆண்டு, நூல் வெளியான ஆண்டு பற்றிய விரிவான கையேடுகள் ஆண்டு தோறும் வெளிவருகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"உற்று நோக்கலும், ஒப்பு நோக்கலும் ஆய்வின் இரு விதிகள். இவை நாளும் ஆங்கிலம், தமிழ் இதழ்கள் படித்தல், பை வானொலி (Packet Transistor) கேட்டல், நூலகங்களில் உள்ளவற்றை அடைவு அட்டைகள் (Index Cards) மூலம் தெரிந்து தெரிந்து, பின் அகராதிகள், கலைக் களஞ்சியக் கட்டுரைகள், தனி ஆய்வு நூல்கள் என்று முறைப்படுத்திப் படிப்பதன் மூலம் வளரும்"

குறிப்புகள் எடுத்தல்

Taking Notes

ஆய்வில் ஈடுபடும்போது குறிப்புகளை எடுப்பது ஒரு கலையாகவே கருதப்படுகிறது. நூலிலிருந்தோ, ஆய்வேட்டி லிருந்தோ குறிப்புகளை எடுக்கும் சமயத்தில் அவை அனைத்துமே இன்றியமையாதனவாக ஆய்வாளருக்குத் தோன்றலாம். ஆயினும் அவை அனைத்தையும் ஆய்வில் பயன்படுத்த இயலாது. எனவே ஆய்வின் எல்லைக்குத் தக்கவாறு மிக இன்றியமையாத குறிப்புகளைத் தேர்ந்து தெளிதல் வேண்டும். பொன்னையும் மணியையும் தேர்ந்தெடுக்கும் வணிகர் போல ஆய்வாளர் குறிப்புகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஓராயிரம் குறிப்பு களை எடுத்திருத்தாலும் அவற்றுள் ஒரு நூறு குறிப்புகளே ஆய்வுக்குப் பயன்படுவனவாக இருக்கலாம்; பிறவற்றை ஒதுக்கி விடலாம். 'ஆய்வேட்டில் குறிப்பிட முடியாமற் போயிற்றே!', 'உழைப்பு வீணானதே' எனக் கவலையுற வேண்டாம். அவை ஆய்வேட்டை எழுதி முடித்த பின்னர், ஆய்வுப்பொருள் பற்றி அகலமாகச் சிந்திக்கத் துணை செய்யக் கூடும். ஆய்வை முடித்த பின்னர் ஆய்வுத் தொடர்பான பல நூல்களை எழுதவும் அவை கைகொடுக்கும். எனவே குறிப்புகளை அழித்துவிடாமல் காத்து வைக்க வேண்டும்.

குறிப்புகளினாலேயே ஆய்வேட்டை நிரப்பிவிடலாகாது. ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது ஒரு குறிப்பாவது இடம் பெற வேண்டும் என்று வலிந்து எழுதி, குறிப்புகள் மலிந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வேடாக ஆக்கிவிடுதல் கூடாது. இதனால் ஆய்வாளரின் தனித்திறம் (Individual talent) மறைந்துபோகும்; ஆய்வுலகிற்கு அவரது கொடையும் (Contribution) புலப்படாது போகும். குறிப்புகள் ஆய்வுக்கு அரண்செய்ய உதவுவனவே அன்றி, அவையே ஆய்வாகி விடமாட்டா.

ஆங்கில நூல்களிலிருந்து குறிப்புகளை எடுத்து மொழி பெயர்த்துத் தரும்போதும், கருத்துகளைத் தரும்போதும் மூல நூலில் உள்ளதை உள்ளவாறு குறிப்புப்பகுதியில் தருதல் வேண்டும். தேர்வாளரும் ஆய்வேட்டைப் பயன்படுத்துவோரும் மூலத்தோடு மொழிபெயர்ப்பை ஒப்பிட்டுப் பார்க்கவும், மேல் விளக்கம் பெறவும் இஃது உதவும்.

ஆய்வாளர் எந்த நூலைப் படிக்கத் தொடங்கினாலும், குறிப்பெடுக்கும் தாளும், பேனாவும் அருகில் இருத்தல்வேண்டும். குறிப்பெடுக்கும் தாள் அல்லது அட்டையை எங்கும் எப்போதும் கொண்டு செல்ல இயலாது என்பதால் ஆய்வாளர் நாட்குறிப்பு ஒன்றைப் பயன்படுத்துதல் சாலச்சிறந்ததாகும். மருத்துவருக்கு நோயாளியிடமிருந்து எந்த நேரத்தில் அழைப்புவரும் என்று சொல்ல இயலாது. அதுபோல ஆய்வாளருக்கு எந்த நேரத்தில் குறிப்புக் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. நாளிதழ் படித்துக் கொண்டிருக்கும்போது, அதில் இடம் பெற்ற செய்தியும் கூட குறிப்பாக அமையலாம். மந்திரச் சடங்குகள் பற்றி ஆய்வு செய்து கொண்டிருந்த நண்பர் ஒருவர் தாந்திரீக பூசை (Tantric Pooja) பற்றிய குறிப்புகளைத் தேடிக் கொண்டிருந்தார். ஒரு நாள் மாலை வேளையில் தேநீர் அருந்திக் கொண்டிருக்கும் போது மாலைப் பத்திரிகை ஒன்றில் வந்த செய்தி அவர் கண்ணில் பட்டது. அச் செய்தி வருமாறு :

நிர்வாண பூஜைக்கு மீண்டும் தடை

—ஷிமோகா (கர்நாடகம்), மார்ச் 8

சென்ற ஆண்டு கர்நாடகத்தில் பரபரப்பை ஏற்படுத்திய நிர்வாண பூசையை இந்த ஆண்டும் நடத்துவ தென்று பக்தர்கள் தீர்மானித்துள்ளனர். இது பற்றிய விவரம் வருமாறு :

கர்நாடக மாநிலத்தில் ஷிமோகா மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரகுத்தி கிராமத்தில் ரேணுகாதேவி கோவில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளது. இந்தக் கோவிலில் ஆண்டுதோறும் நிர்வாண பூசை நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் அருகில் உள்ள ஆற்றில் குளித்துவிட்டுப் பிறந்த மேனியுடன் இந்தப் பூசையில் கலந்து கொள்வார்கள். 1986ஆம் ஆண்டில் இப்பூசையைத் தடுத்து நிறுத்த முயன்ற சமூக அமைப்பாளர்களும் காவல் துறையினரும் நிர்வாணமாக்கப்பட்டு அடித்து உதைக்கப் பட்டனர். ஆனால் இந்த ஆண்டு நடக்கவிருக்கும் நடக்க உத்தேசித்துள்ள நிர்வாண பூசைக்கு அரசு மீண்டும் தடை விதித்துள்ளது. இப்பூசையைத் தடுத்து நிறுத்த சுமார் இரண்டாயிரம் போலீசார் ரேணுகாதேவி கோவிலில் நிறுத்தப்பட்டுள்ளனர். நிலைமையைப் போலீசார் கண் காணித்து வருகின்றனர்.

— மாலைமுரசு 8-3-87

சிலவகைப் பூசைகளிலும் சடங்குகளிலும் சமுதாயத்திற்கு இன்றும் இருக்கின்ற ஆழ்ந்த ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் சுட்டுவதற்கு இத்தகுக் குறிப்பு அரணாக அமைவதைக் காணலாம்.

இவ்வாறு குறிப்புகள் எங்கும் எப்போதும் ஆய்வாளருக்குக் கிடைக்கலாம். எனவே அவர் எங்கு சென்றாலும் ஒரு நாட் குறிப்பை எடுத்துச் செல்வது நல்லது.

2. குறிப்பெடுத்தலில் இரு முறைகள் உள்ளன. படித்துக் கொண்டிருக்கும்போதே தேவையான குறிப்புகளை உடனுக் குடன் எழுதிக்கொள்வது ஒருமுறை; குறிப்புகளைக் கோடிட்டு வைத்துக் கொண்டு நூலைப் படித்து முடித்த பின்னர் வரிசை யாகக் குறிப்பெடுப்பது இன்னொரு முறை. ஆய்வாளருடைய நூலாயின் இவர் விருப்பம் போல் அங்கங்குக் கோடிட்டுக் கொள்ளலாம்; சில சிறு குறிப்புகளையும் அருகருகே எழுதிக் கொள்ளலாம். ஆனால் இரவல் நூலாயின் இவ்வாறு செய்ய இயலாது. எனவே படித்துக்கொண்டிருக்கும்போதே அவ்வப் போது குறிப்புகளை எழுதிக்கொள்வது நல்லது.

3. ஆய்வுக்குப் பயன்படும் நூல்களை முதன்மைச் சான்றுகள் என்றும் துணைமைச் சான்றுகள் என்றும் இரண்டாகப் பகுக்கலாம். "சங்க இலக்கியத்தில் பொழுது வருணனைகள்" எனும் தலைப்பில் ஆய்வு செய்ய முற்படுவோர்க்குத் தொல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியன முதன்மைச் சான்றுகளாகத் திகழ்வனவாகும். இவற்றில் உள்ள 90% செய்திகள் ஆய்வுக்குப் பயன்படுவன. இவற்றைக் குறிப்பெடுத்து எழுதிக்கொண்டிருப்பது காலத்தை வீணாக்குவதில் முடியும். எனவே முதன்மைச் சான்றுகளாகப் பயன்படும் நூல்களைச் சொந்தமாக வாங்கி வைத்துக் கொள்வதே சிறந்தது.

8140

ஆய்வுக்குத் துணை செய்யும் நூல்கள் துணைமைச் சான்றுகள் எனப்படுகின்றன. 'சங்க இலக்கியத்தில் பொழுது வருணனைகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்பவர்க்குப் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (மு. வ), 'Nature Poetry in Tamil' (Xavier S. Thaninayagam), 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' (மா. இராசமாணிக்கனார்), 'நெய்தல்திணை' (முத்துக்கண்ணப்பர்), 'Marutam (V. T. Manickam) போன்ற நூல்கள் துணைமைச் சான்றுகளாகப் பயன்படுவனவாகும். ஆய்வு முடிவுகளுக்கு அரண் சேர்க்கும் சான்றுகளாக இவை அமையவல்லன.

4. எடுக்கின்ற குறிப்பில் சொல்லோ தொடரோ விளங்காவிடில் அதை விட்டுவிடுவதோ, புரியாமல் குறித்துக் கொள்வதோ கூடாது. எவ்வாறேனும் விளங்காத சொல் அல்லது தொடருக்குரிய விளக்கத்தைப் பெறவேண்டும். அப்போதுதான் ஆய்வாளருக்கு மட்டுமின்றி ஆய்வுக்கும் வெளிச்சம் கிடைக்கும். இருட்டில் இருப்பவற்றை இருட்டிலேயே விட்டுவிடுதல் கூடாது. இதனை விளக்குவதற்கு ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டலாம்.

தூத்துக்குடி பரதவர் பாடல்களை ஆராய்ந்து வரும் நண்பர் ஒருவர் அப்பாடல்களை ஒலிநாடாவில் பதிவு செய்திருந்தார். அதனை ஏட்டில் பெயர்த்து எழுதும்போது அப்பாடலில் 'சொய்யம்' என்ற சொல் இடம் பெற்றிருக்கக் கண்டார். அதுவரை நண்பர்க்கு அதன் பொருள் தெரியாது; பாடிய பரதவரை அணுகிப் பொருள் கேட்கவும் வாய்ப்பில்லை. அவரது ஆய்வை மேலும் தொடரவிடாமல் இச்சொல் நண்பர் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது. தற்செயலாகக் குமுதம் வார இதழைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு கதையில் 'சொய்யம்' என்ற இச்சொல் ஒரு பலகாரத்தைக் குறிப்பதை அறிந்தார். இப்பலகாரம் எதற்குச் செய்யப்படுகிறது? எப்படிச் செய்யப்படுகிறது? என்பதை அறிய அவாவினார். குமுதம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அலுவலகத்திற்கு எழுதி அக்கதையாசிரியரின் முகவரியைப் பெற்றார். அம்முகவரிக்கு எழுதிக் கதையாசிரியரிடமிருந்து 'சொய்யம்' பற்றிய மேலும் விவரம் பெற்றார்; தெளிவு பெற்ற மகிழ்ச்சியில் நண்பர் ஆய்வைத் தொடர்ந்தார்.

5. குறிப்பெடுப்பதற்கு 5" X 3" அளவுள்ள வெண்ணிற அட்டையைப் பயன்படுத்த வேண்டும். ஆய்வினை முடித்த பின்னரும் குறிப்புகளை நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்த அட்டை ஏதுவாக அமையவல்லது.

6. ஓர் அட்டையில் ஒரு குறிப்பு என்ற வரன்முறையைப் பின்பற்ற வேண்டும். எடுக்கும் குறிப்பு, அட்டையின் ஒரு பக்கத்திற்கும் அதிகமாகப் போனால் அந்தப் பக்கத்தின் கீழ் இடது மூலையில் (—2) என்ற எண்ணையும், அடுத்த பக்கத் தலைப்பில் **—2—** என்ற எண்ணையும் இட்டுத் தொடர வேண்டும்.

7. குறிப்பெடுக்குமுன் குறிப்பட்டையின் மேல் வலப்பக்க ஓரத்தில் நூற்பெயரையும், நூலாசிரியர் பெயரையும், குறிப்பு பற்றிய 'குறிப்பினை'யும் (Caption) எழுதிக் கொள்ள வேண்டும்.

(எ-டு)

திராவிடமொழி இலக்கியங்கள்
— அறிமுகம்
டாக்டர். ச. வே. சுப்பிரமணியன
குறவஞ்சி

இவ்வாறு எழுதிக் கொள்வது, பின்னால் குறிப்புகளை நிரல் படுத்துவதற்குத் துணை செய்யும்.

8. குறிப்பெடுக்கப்பட்ட நூலின் பக்க எண்ணை, குறிப்பின் கீழே குறித்துக் கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(எ டு)

திராவிட மொழி இலக்கியங்கள்
— அறிமுகம்
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
குறவஞ்சி

'தெலுங்கில் யக்ஷகானம் எனும் மக்கள் நாடக வகையின் சார்புடன் குறவஞ்சியைச் சுட்டுகின்றனர். குறவஞ்சி என்பது குறக்குடியினர் எனப் பொருள் படுவதாகக் கொண்டு, அவர்கள் தொடர்புற்று வரும் யக்ஷகானம் குறவஞ்சி எனப் பெயர் பெறு வதாக நினைக்கின்றனர். குறி கூறும் பெண், பாத்திர மாக வந்து செயல்படுவதை, பாசுபுலெடி ரெங்க ஜம்மாவின் மன்னாருதாச விலாச நாடகம் காட்டு கின்றது. (ப. 203)

9. எடுத்தாளுகின்ற குறிப்புக்குள் கூற்றுகள் வருமானால் பின் வருமாறு குறிப்பிட வேண்டும்:

இலக்கியக் கலை
அ. ச. ஞானசம்பந்தன்
<u>கவிஞனும் காட்சியும்</u>

'கவிஞன் தான் காணுகின்ற பொருளில் அன்பு செலுத்துகின்றான். அது வியப்பாகிறது. பின்னர் அதன்பால் காதல் கொள்ளுகிறான். அந்நிலைக்குப் பிறகு அப்பொருளோடு ஒன்றி விடுகிறான். காதலின் இறுதிநிலை ஒன்றல் தானே? இதனையே சிறந்த கவிகளுள் ஒருவராகிய பி. பி. ஷெல்லி "பாடலெல்லாம் காதலிலேயே மூகிழ்க்கிறது" என்கிறார்'. (ப. 59)

10. குறிப்பில் சில சொற்களையோ தொடர்களையோ நீக்க வேண்டியிருந்தால் ... என்று குறியிட வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இலக்கியக் கலை
> அ. ச. ஞானசம்பந்தன்
> கவிஞனும் காட்சியும்
>
> 'கவிஞன் தான் காணுகின்ற பொருளில் அன்பு செலுத்துகின்றான். அது வியப்பாகிறது. பின்னர் அதன்பால் காதல் கொள்ளுகிறான். அந்நிலைக்குப் பிறகு அப்பொருளோடு ஒன்றி விடுகிறான். ... இதனையே சிறந்த கவிஞர்களுள் ஒருவராகிய பி. பி. ஷெல்லி "பாடலெல்லாம் காதலிலேயே முகிழ்க்கிறது" என்கிறார்.

11. குறிப்புத் தொடங்கும்போது இவை, இந்நூல், இவர், இவர்கள் என்பன போன்ற முற்சுட்டுகள் இருப்பின், அவற்றைத் தவிர்த்து, அவற்றுக்குப் பதிலாக அச்சுட்டுகள் குறிப்பனவற்றை அடைப்புக் குறிக்குள் எழுதவேண்டும்.

(எ-டு) 'இந்நூல் பத்தினிக் கடவுள் வழிபாடு தமிழ்நாட்டிலும் ஏற்பட்ட பொழுது அதனை விளக்குவதற்கு எழுந்த சரித்திர மாக உள்ளது'

(மூலம்)

> இலக்கிய மணிமாலை
> வையாபுரிப் பிள்ளை
> பத்தினித் தெய்வவழிபாடு/சிலப்பதிகாரம்
>
> '... (சிலப்பதிகாரம்) பத்தினிக்கடவுள் வழிபாடு தமிழ்நாட்டிலும் ஏற்பட்டபொழுது அதனை விளக்கு வதற்கு எழுந்த சரித்திரமாக உள்ளது.
>
> (ப. 52)

12. பாடலடிகளை எடுத்தாளும்பொழுது இடையில் ஓரிரு சீர்களைத் தவிர்ப்பதாயின் அச்சீர்களுக்குப் பதிலாக ... ... என்ற குறியையும், சில பாடலடிகளைத் தவிர்ப்பதாயின் பாட லடிகளுக்கிடையில் — என்றும் குறியிட வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(எ-டு)

தூது

" ... ... என்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே'.
—நற். 70 : 9-10

" சொல்லல் வேண்டுமால் அலவ ...
...
நின்னுறு விழுமம் களைந்தோள்
தன்னுறு விழுமம் நீந்துமோ எனவே"
—அக. 170 : 8; 13-4

குறிப்பு மூல அட்டை

SOURCE CARD / BIBLIOGRAPHY CARD

1. குறிப்பு எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் 5"×3" அளவுள்ள வெண்ணிற அட்டைகளையே குறிப்புமூலத்தை எழுதுவதற்கும் பயன்படுத்த வேண்டும். ஆய்வினை எழுதி முடித்த பின்னர், துணை நூற்பட்டியல் தொகுப்பதற்கு இது வாய்ப்பாக அமையும்.

2. நூலகக் குறிப்பெண் (call number), நூலகம், நூலாசிரியர் பெயர், நூலின் பெயர், வெளியீட்டாளர், வெளியிட்ட ஆண்டு முதலிய விவரங்களைக் குறிப்புமூல அட்டையில் குறித்துக் கொள்ள வேண்டும்.

10988
0 : 1 : g
J 6
TPML
Skelton, Robin
The Poetic Pattern
University of California Press
1956

(TPML : T. P. M. Library, Madurai Kamaraj University)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. நூலாசிரியர் பெயரைக் குறிப்பட்டையில் எழுதும்போது இயற்பெயரை முதலிலும், முன்னெழுத்தை அதன் பின்னரும் குறிப்பிட வேண்டும்.

(எ-டு) பாலசுப்பிரமணியன், டாக்டர் சி.
சக்திவேல், டாக்டர் சு.,

4. நூலாசிரியர் பெயரை நூலில் உள்ளவாறு எழுதவேண்டும். சான்றாக 1947-ல் மு. வரதராசனார் எழுதிய 'மொழி நூலி'ல் அவர் பெயர் 'மு. வரதராசன்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. 1979-ல் வெளிவந்த 'இலக்கியத் திறனி'ல் அவரது பெயர் 'டாக்டர் மு. வரதராசன்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. எனவே இவ்விரு நூல்களையும் பின் வருமாறு எடுத்தெழுத வேண்டும் :

வரதராசன், மு.,
மொழி நூல்,
பாரி நிலையம்,
சென்னை,
1947.

வரதராசன், டாக்டர் மு.,
இலக்கியத் திறன்,
பாரி நிலையம்,
சென்னை,
1979.

5. இதுபோன்றே நூலாசிரியர் பெயரைக் குறிப்பிடும்போது ஆர், அன், அம் போன்ற பெயர் முடிபுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விசுவநாதம், கி. ஆ. பெ.,
திருக்குறள் கட்டுரைகள்,
பாரி நிலையம்,
சென்னை,
1958.

விசுவநாதன், டாக்டர் ஈ.சா.,
ஆய்வு நெறிமுறைகள்,
க்ரியா வெளியீடு,
சென்னை,
1976.

மீனாட்சி சுந்தரனார்,
தெ பொ.,
பாட்டிலே புரட்சி,
தொல்காப்பிய நூலகம்,
சிதம்பரம்,
1963.

சுப்பிரமணியன், டாக்டர்
ச. வே,.
திராவிட மொழி இலக்கியங்
கள்—அறிமுகம்
உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்,
சென்னை, 1983.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. ஒரு நூலை இரு ஆசிரியர்கள் இணைந்து எழுதியிருந்தால் இரு ஆசிரியர்களின் பெயர்களுக்கிடையில் மற்றும் என்ற இணைப்பைச் சேர்க்க வேண்டும்.

(எ-டு) கிரிபிரகாஷ், டாக்டர் டி. எஸ்., மற்றும்
ஆனந்தகுமார், பா., தெலுங்கு இலக்கிய வரலாறு,
பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1986.

7. இருவர்க்கு மேற்பட்டோர் நூலை எழுதியிருந்தால் நூலில் அவர்தம் பெயர்கள் இடம்பெற்ற வரிசைப்படி எடுத்து எழுத வேண்டும்.

(எ-டு) Sandage, C. H., Fryburger Vernon, Rot zollkim
Advertising Theory and Practice, Richard D.
Irwin Inc. Homewood, Illinois, 1987.

8. பதிப்பாசிரியர் ஒருவரால் நூல் வெளியிடப்பட்டிருந்தால் (பதி.) என்று குறிப்பிட வேண்டும். பதிப்பாசிரியர் பலரால் நூல் வெளியிடப்பட்டிருக்குமாயின் முதலில், இடம்பெற்ற பதிப்பாசிரியர் பெயரைக் குறிப்பிட்டு, அதன் பின்னர் 'பிறரும்' என எழுத வேண்டும். தொகுத்துப் பதிப்பித்திருந்தால் (தொகு. பதி.) என்றும், மொழி பெயர்த்திருந்தால் (மொ. பெ.) என்றும், உரையாசிரியராயிருப்பின் (உரை.) என்றும் குறிப்பிட வேண்டும்.

(எ-டு) வையாபுரிப்பிள்ளை, எஸ்., (பதி.),
நவநீதப்பாட்டியல்...

இளங்கோவன், மா. ரா. (தொகு.), அறிவுலகின்
குருதேவர்...

வையாபுரிப்பிள்ளை, எஸ். (தொகு. பதி.)
சங்க இலக்கியம்...

மணவாளன், அ. அ. (மொ. பெ.) அரிஸ்டாடிலின்
கவிதை இயல்...

நச்சினார்க்கினியர் (உரை.), தொல்காப்பியம்,
பொருளதிகாரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. நூலாசிரியரின் புனைபெயர் மட்டும் முகப்புப் பக்கத்தில் இடம் பெற்றிருக்குமாயின் புனைபெயரை முதலிலும் அதைத்தொடர்ந்து இயற்பெயரைப் பகரவளைவிற்குள்ளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழண்ணல் (பெரிய கருப்பன், இராம.,)
தாலாட்டு...

10. நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை எனில் அடைப்புக் குறிக்குள் பெ. தெ. என்று குறிப்பிட வேண்டும்.

(பெ. தெ.) ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ்[1] ...

11. பலரது கவிதைகள் இணைந்த பாடல் தொகுதியாயின் (Anthology), ———, என்ற கோடிட்டுவிட்டு, அதைத் தொடர்ந்து நூற்பெயர், பதிப்பாளர் போன்ற விவரங் களைத் தரவேண்டும்.

———, குறுந்தொகை, சாமிநாதையர், டாக்டர். உ.வே., (பதிப்.) டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூலகம், சென்னை, 1955.

12. கட்டுரையாளர் பெயர் தெரியும்; ஆனால் எடுத்தாண்ட குறிப்பில் பெயர் இல்லையெனில் கட்டுரையாளர் பெயரை அடைப்புக் குறிக்குள் தரலாம் :

(Henry Z. Blank) 'Art for Its Own Sake', Magazine of New Art XXX, January 1912, 85-90

13. நூற்பெயர்களை நூலில் உள்ளவாறு முழுமையாகக் குறிப்பிட வேண்டும்.

அகத்தியலிங்கம், டாக்டர் ச.,
சங்கத்தமிழ் I (மொழியியல் நோக்கில் சங்க இலக்கியங்கள்)

மகாதேவன், மேஜர் கதிர்.,
பழந்தமிழர் வீரப்பண்பாடு (ஒப்பிலக்கியக் கணிப்பு)

Thaninayagam, Xavier S.,
Landscape and Poetry (A Study of Nature in Classical Tamil Poetry)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14. நூலிலுள்ள ஒரு கட்டுரையை மட்டும் குறிப்பெடுக்கப் பயன்படுத்தியிருப்பின் கட்டுரையாசிரியர், கட்டுரைப் பெயர், நூல் தொகுப்பாசிரியர்கள், நூற்பெயர், வெளியீட்டாளர், பதிப்பு, ஆண்டு முதலிய விவரங்களை வரிசையாகக் குறித்தல் வேண்டும். கட்டுரைப் பெயருக்கு அடிக்கோடு இடுவதும் உண்டு.

மாணிக்கம், டாக்டர். வ. சுப., தொல்காப்பியநயம் தொல்காப்பியச் சிந்தனைகள், தமிழ்த் துறை ஆசிரியர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், முதற்பதிப்பு, 1978.

15. குறிப்புதவும் நூல் பல தொகுதிகளைக் கொண்டதாக இருப்பின் தொகுதி எண்ணைக் குறிப்பிட வேண்டும். தொகுதி எண்கள் அரேபிய எண்களிலும், ரோமன் எண்களிலும் இடப்பெறுவதுண்டு. நூலில் உள்ளது போன்றே இதனைக் குறிப்பிட வேண்டும்.

அகத்தியலிங்கம், டாக்டர். ச., சங்கத்தமிழ் III (வினையியல்) அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1984.

மாதையன் பெ., மற்றும் சித்திரபுத்திரன், எச்., (தொகுப்.) மர இனப் பெயர்த்தொகுதி 2, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

16. தொகுதி எண்ணை நூற்பெயரை அடுத்துக் குறிப்பிட்டால், அத்தொகுதி வெளியான ஆண்டை மட்டும் குறிப்பிட்டால் போதுமானது.

Grote, John, History of Greece, Harper & Bros, Newyork, 1869 V, p. 249.

தொகுதி எண்ணை நூலின் பதிப்பு விவரத்திற்குப் பின் குறிப்பிட்டால், தொகுதிகள் அனைத்தும் வெளியான ஆண்டுகளின் விவரத்தைத் தருதல் வேண்டும்.

Grote, John, History of Greece, Harper & Bros, Newyork, 1853—72 V, p 249.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17. சில நூல் வெளியீட்டு நிறுவனங்களுக்குப் பல கிளைகள் உள்ளன. Oxford, Mac Millon, Mc Graw Hill, Blakie, Holt Rinehart & Winston Inc. போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு உலகெங்கிலும் கிளைகள் உள்ளன. இதுபோன்றே இந்தியாவில் உள்ள Sterling, S. Chand, Asia Publishing House போன்ற நிறுவனங்களுக்கு இந்தியாவில் ஆங்காங்கே கிளைகள் உள்ளன. தமிழகத்திலும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணிவாசகர் நூலகம் போன்ற நிறுவனங்களுக்குத் தமிழகத்தில் கிளைகள் உள்ளன. நூல்பதிப்பு விவரத்தில் இந்நிறுவனங்கள் தம் கிளைகள் உள்ள இடங்களின் பெயர்களை வரிசையாகக் குறித்திருப்பர். இவற்றுள் முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள இடத்தையே நூல் பதிப்பிக்கப்பட்ட இடமாகக் கருதுதல் வேண்டும்.

(எ-டு) Parker, William Riley, Milton—A Biography, II Oxford University Press London (Glascow Newyork Toronto Melbourne, Wellington, Capetown Salisbury Ibadan Nairobi Lusaka AddisAbaba Bombay Calcutta Madras Karachi Lahore Dacca KualaLumpur HongKong Tokyo) 1968.

Galder, Daniel D., (ed.) Old English Poetry, University of California Press, Berkeley (Los Angels London) 1979

Daiches, David, Milton, Hutchinson University Library, London (Melbourne Sydney Auckland Bombay Toronto Johannesburg Newyork) 1966

Suddhananda Bharati, The Grand Epic of Saivism, The South India Saiva Siddhanta works Publishing Society, Madras—1 (Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1) 1970.

18. குறிப்பு மூல அட்டையில் நூலின் பதிப்பு விவரத்தை நூலில் உள்ளவாறு குறிப்பிட வேண்டும்.

சுப்பிரமணிய பிள்ளை, கா. சு., இலக்கிய வரலாறு (முதற் பாகம்), ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு (திருத்திய பதிப்பு), 1949.

மகாதேவன் கதிர்., ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், மாக்மில்லன், சென்னை, [illegible] பதிப்பு, 1987.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புகளைத் தேர்ந்தெடுத்துக் குறித்துக் கொள்வது மட்டும் போதாது; அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தவும் தெரிய வேண்டும். எல்லாக் குறிப்புகளையும் முன்னால் வைத்துக் கொண்டு குழம்பக் கூடாது. எடுத்த குறிப்புகள் அனைத்தையும் சிறுசிறு தொகுதிகளாக வகைப்படுத்த வேண்டும். சான்றாக, வாழ்வியல் சடங்குகளைப் பற்றிய ஆய்வுக்கட்டுரையை எழுதமுற்படும் ஒருவர், இச் சடங்குகளோடுத் தொடர்புடைய பல்வேறு குறிப்புகளைக் குறிப்பட்டையில் தொகுத்துக் கொள்கிறார்; தொகுத்த குறிப்புகளைப் பின் வருமாறு வகைப்படுத்துகின்றார் :

I வாழ்வியல் சடங்குகள்

1. பிறப்புச் சடங்குகள் : நச்சுக்கொடியும் நம்பிக்கையும்
சேனை போடுதல்
பெயரிடுதல்
காது குத்துதல்
குழந்தைக்குத் திருமணம் செய்வித்தல்

2. பூப்புச் சடங்குகள் : தனிமைப்படுத்துதல்
நீராட்டுதல்
ஏற்றி இறக்குதல்
கண்ணேறு கழித்தல்
பாவனைத் திருமணம் செய்வித்தல்

3. திருமணச் சடங்குகள் : பண்டாரு கொட்டுதல் (மஞ்சள் இடித்தல்)
பொன் உருக்குதல்
முளைப்பாலிகை இடுதல்
அரசாணிப்பானை வைத்தல்
அரசாணிக் கால் நடுதல்
மாலை மாற்றுதல், நலுங்கு வைத்தல்
தாலி பெருக்குதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. இறப்புச் சடங்குகள் : நீர்மாலை எடுத்தல்
சீதேவி வாங்குதல்
கன்னி கழித்தல்
குடம் உடைத்தல்
தீச்சட்டி ஏந்துதல்
புதைத்தலும் எரித்தலும்
காக்கைக்குச் சோறிடல்
கருமாதி செய்தல்

இவ்வாறு குறிப்பினை வகைப்படுத்திக் கொள்வது, ஆய்வின் பாதி வேலை முடிந்தது போலாகும். ஆய்வுக்கான இயல்களை வகுத்து, ஒவ்வோர் இயலிலும் இடம் பெறப் போகும் செய்திகளை முன்கூட்டியே தெரிந்து, அதற்கேற்ப முன் வரைவுத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். இதற்கேற்றாற் போல் குறிப்புகளை வகைப்படுத்திக் கொண்டால் குறிப்பிட்ட நாளுக்கு முன்பாகவே ஆய்வினை முடிக்க இயலும். ஆய்வின் ஒவ்வொரு படிநிலையிலும் தெளிவும் திட்டமும் வேண்டும். அதுவே ஆய்வுப் பணியின் சுமையைக் குறைத்துச் சுவையை வளர்க்கும்.

19. மாத இதழ்களிலிருந்து குறிப்புகளை எடுத்தாளும்போது பின்வரும் இரு முறைகளுள் ஒன்றைப் பின்பற்றலாம்:

ஆனந்தவிகடன், மலர் 16, இதழ் 11 ...
ஆனந்தவிகடன், 22-3-90

நாளிதழ் அல்லது வார இதழாயின் நாள் விவரத்தைத் தருவது சிறப்பு. நாளிதழ் வெளியான நகரின் பெயரையும் குறிப்பிட வேண்டும்.

'காவிரி நீர்ப் பிரச்சினையும் தமிழக அரசுகளும்'
செய்தி விமர்சனம்: தினமணி (மதுரை), 29-4-90.

20. குறிப்புகளில் பக்க எண்களைக் குறிப்பிடுவதற்குரிய முறைகள் வருமாறு :

ஒரு பக்கம் : ப. 86
பல பக்கங்கள் : பக் 86-89

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்று எண்களுக்கு மேல் வருமாயின் பக். 123-129 என்பதற்குப் பதில் பக். 123-29 என்று குறிப்பிடலாம். பூச்சியங்கள் இடம் பெறும் போது பக். 140-42 என்று குறிப்பிடலாமே தவிர, பக். 140-2 என்று குறிப்பிடக் கூடாது. அது போன்றே பக். 400-402 என்று எழுதலாமே தவிர, பக். 400-02 என்று எழுதலாகாது.

21. ஒரு குறிப்பே மறு முறையும் பல முறையும் இடம் பெறுமாயினும், ஒரு நூலிலிருந்தே பல குறிப்புகள் இடம் பெறுமாயினும் மேலது (மேற்கூறிய குறிப்பு), மு. நூல் (முற்கூறிய நூல்), மு. ப. (முன்கூறிய பகுதி) போன்ற சுருக்கங்கள் இடம்பெறுகின்றன. இவற்றைப் பொருளறிந்து இடமறிந்துப் பின்பற்ற வேண்டும்.

மேலது	:	Ibid (Ibidem)
மு. நூல்	:	op. cit (opera cited)
மு. ப.	:	loc cit (loco citato : location cited)

(எ-டு)

1. இராமலிங்கம், மா, (எழில் முதல்வன்), *நோக்குநிலை*, இராசி பதிப்பகம், கும்பகோணம், 1984, ப. 22
2. பாலசுப்பிரமணியன், சி., *அறவோர் மு. வ.*, பாரிநிலையம், சென்னை 1986, ப. 11
3. மேலது (மேற்கூறிய நூலில் அதே பக்கத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.)
4. மேலது, ப. 80 (மேற்கூறிய நூலில் வேறு பக்கத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.)
5. இராமலிங்கம், மா., மு. நூல் (முற்கூறிய நோக்குநிலை எனும் நூலில் அதே பக்கத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.)
6. இராமலிங்கம், மா., (எழில் முதல்வன்), *திறனாய்வுநெறி*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983, ப. 22.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. வீராசாமி, தா. வே., தமிழ்நாவல் இயல், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1986, ப. 56

8. இராமலிங்கம், மா., (எழில் முதல்வன்) நோக்குநிலை, ப.56 (ஒரே ஆசிரியரின் இருநூல்கள் குறிப்பில் எடுத்தாளப் பெறுவதால் எந்த நூலிலிருந்து எடுக்கப் பெற்றது என்பதைச் சுட்டுவதற்கு ஆசிரியர் பெயரோடு நூற்பெயரும் தேவைப்படுகிறது).

9. பாலசுப்பிரமணியன், சி., மு ப., (அறவோர் மு. வ. நூலில் முன்பு காட்டிய பகுதி)

குறிப்பு:

1. இந்நூலின் முகப்புப் பக்கத்தில் உள்ள குறிப்பு வருமாறு : "எவரோ இயற்றி, கோவை பூளைமேடு திரு. மு. வேணு கோபாலசாமி நாயுடு அவர்கள் முன்பு வெளியிட்டதைப் பதிப்பித்தவர் நா. வரதராஜுலுநாயுடு" (பதிப்புஆண்டு இல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆய்வு தொடங்கும் தொடக்க நிலையில் இருக்கும் மாணவர்கள் தங்கள் தங்கள் ஆய்வுப்பொருளோடு தொடர்புடைய சிறந்த ஆய்வேடுகள் சிலவற்றையேனும் மாதிரிக்காகப் (Model) படிக்க வேண்டும். அந்த மாதிரியினும் சிறந்தது படைக்க முயல வேண்டும்"

ஆய்வேடு
Thesis

பொதுவாக ஓர் ஆய்வேடு பின்வரும் பகுதிகளாக அமையும் :

1. முகப்புப் பக்கம்
2. மேற்பார்வையாளர் சான்றிதழ்
3. ஆய்வாளர் உறுதிமொழி
4. நன்றியுரை
5. ஆய்வேட்டைப் பயன்படுத்த உதவும் குறிப்புகள்
6. பொருளடக்கம்
7. அ. அட்டவணைகள்
   ஆ. வரைபடங்கள்
   இ. கட்ட வரைபடங்கள்
   ஈ. புள்ளி விவரப் படங்கள்
   } இவை ஆய்வேட்டினுள் ஆங்காங்கே இடம் பெறுபவை.
8. சுருக்கக் குறியீட்டு விளக்கம்
9. ஆய்வு முன்னுரை
10. ஆய்வேடு
11. துணை நூற்பட்டியல்
12. பின்னிணைப்புகள்
13. கலைச்சொல் நிரல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. முகப்புப் பக்கம் ஆய்வேட்டின் முகப்புப் பக்கத்தில் பின் வரும் குறிப்புகள் இடம்பெற வேண்டும் :

அ. ஆய்வுத் தலைப்பு (பதிவு செய்துள்ளதுபோல்)

ஆ. எந்தப் பட்டத்திற்கு அளிக்கப்படுகிறது என்பது பற்றிய விவரம் (எம் பில் / பிஎச்.டி)

இ. ஆய்வாளர் பெயர்

ஈ. நிறுவனத்தின் பெயர்

உ. ஆய்வேடு அளிக்கப்பட்ட மாதமும் ஆண்டும்

(எ-டு) **கம்பம் பள்ளத்தாக்கில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள்**

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அறிஞர் (Ph. D.) பட்டத்திற்கு அளிக்கப்பெறும்
ஆய்வேடு

மா. வண்ணமுத்து

அஞ்சல்வழிக்கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
1987

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. மேற்பார்வையாளரின் சான்றிதழ் : ஆய்வாளர் தம் ஆய்வினைத் தன்னியலாகச் செய்தார் என்றும், இத் தலைப்பில் வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு வழங்கப்படவில்லை என்றும் ஆய்வு நெறியாளர் சான்றளிப்பார். மேற்பார்வையாளர் ஒருவர்க்கு மேற்படின் (Doctoral Committee), குழுவின் அமைப்பாளர் (Convenor சான்று அளிப்பார். இது முகப்புப் பக்கத்தை அடுத்து) இடம் பெறவேண்டும்.

(எ-டு)

பேராசிரியர் மா. இராமலிங்கம்,, எம். ஏ., பிஎச். டி. — திருச்சிராப்பள்ளி 20/2/88

தமிழ்த்துறைத் தலைவர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

"பாகனேரி நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வுரை, பாரதிதாசன் பல்கலைக் கழகப் பிஎச். டி. பட்டத்திற்காக என் மேற்பார்வையில் பூண்டி சு. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ஆத. முத்தையா எம். ஏ., எம். பில்., அவர்கள் 31-12-1983 முதல் 31-12-1987 வரை ஆராய்ச்சி மேற்கொண்டு உருவாக்கிய ஆய்வுப் படைப்பாகும். இவ்வாய்வுரை அல்லது இதன் பகுதிகள் இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்காகவோ ஆய்வரங்கிற்கோ பணிந்தளிக்கப்படவில்லை என்பதற்குர், இஃது ஆய்வாளர் தம் சொந்த பயிற்சிப் பணியாகும் என்பதற்கும் சான்று வழங்குகின்றேன்.

(மா. இராமலிங்கம்)

3. ஆய்வாளர் உறுதிமொழி : இவ் ஆய்வு தம்முடைய சொந்த முயற்சியிலேயே உருவானதென்றும், வேறு ஆராய்ச்சிப் பட்டத்திற்கு இவ் ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் ஆய்வாளர் உறுதிமொழி தருவார். இதனை ஆய்வு நெறியாளர் உறுதி செய்வார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வாளர் உறுதிமொழி

(எ-டு) ந. சொக்கலிங்கம், மதுரை-625 021
தமிழ் விரிவுரையாளர், 4-7-1984.
அஞ்சல் வழிக் கல்வித்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை 625 021.

'வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் இலக்கணக் கோட்பாடுகள்' என்னும் பொருளில் அறிஞர் (பிஎச்.டி.) பட்டத்திற்குச் செய்யப்பட்ட இவ்வாய்வு என் சொந்த முயற்சியில் உருவானதேயாகும். இதற்குமுன் எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப் பெறவில்லை என உறுதி அளிக்கின்றேன்.

<u>உறுதிக் கையொப்பம்</u>

....

அறிஞர் இராம. பெரியகருப்பன் (ந. சொக்கலிங்கம்)
பேராசிரியர், தலைவர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை 625 021.

4. **நன்றியுரை :** ஆய்வு மேற்கொள்ள அனுமதியளித்தவர்கட்கும், ஆய்வு மேற்பார்வையாளர்க்கும், ஆய்வின்போது நூல்கள் உதவியும், குறிப்புகள் தந்தும், கருத்துரைகள் நல்கியும், பிழைகளைத் திருத்தியும் பலவழிகளிலும் உதவியவர்கட்கு நன்றி சொல்வதற்காக நன்றியுரை என்ற பகுதி ஒதுக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(எ-டு)

நன்றியுரை[1]

எனது ஆய்வுப் பணிக்கு மேற்பார்வையாளராக அமைந்து என்னை வழிநடத்திய மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் அறிஞர் போ. இசரயேல் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்கலைக் கழகத்தில் பதினெட்டு மாதங்கள் ஆய்வு செய்ய எனக்கு வாய்ப்பு வழங்கிய மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அறிஞர் வ. சுப. மாணிக்கம் அவர்களுக்கும், பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் அறிஞர் தமிழண்ணல் அவர்களுக்கும் என் உள்ளார்ந்த நன்றி உரியதாகும்.

தேம்பாவணியை நான் முழுமையாகப் படிக்கவும் பயிற்றவும் சொற்பொழிவு ஆற்றவும் தூண்டிய அருளாளர் க. வி. இஞ்ஞாசி சாமா அடிகளாரை, இவ்வேளையில் நினைந்து போற்றுகின்றேன். ஆய்வுத் தலைப்பு வழங்கிய அறிஞர் வி. மி. ஞானப்பிரகாசம் அடிகளார் என் நன்றியறிதலுக்கு உரியவர்.

நான் ஆய்வு மேற்கொள்ள இசைவு நல்கிய எங்கள் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எ. து. பொன்னுதுரை, பேருள்ளம் கொண்ட துணை முதல்வர் பேராசிரியர் த. பாண்டியன் தனசிங் உற்றுழி உதவிய நண்பர் அறிஞர் மு. மணிவேல், கருத்துரைகள் வழங்கிய பேராசிரியர் ஐதர் அலி, அறிஞர் இந்திராபாய், தட்டச்சு செய்து தந்த அன்பர் எம். ஏ. செல்வநாயகம் ஆகியோருக்கு என் அன்பு கலந்த நன்றி என்றும் உரிமையாகும். "பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரோ?" (குறுந்தொகை, 115) என்னும் கபிலர் மொழியை எண்ணிப் பாராட்டுகின்றேன்.

3. ஆய்வேட்டைப் பயன்படுத்த உதவும் குறிப்புகள் :

ஆய்வேட்டை எழுதும்போது ஆய்வாளர் சில வழிமுறைகளைப் பின்பற்றியிருப்பார். அதனை ஆய்வேட்டின் முற்பகுதியில் குறிப்பிடுவது, ஆய்வேட்டை மதிப்பிடுபவர்களுக்கும், படித்து அறிபவர்களுக்கும் துணையாக அமையும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(எ-டு) குறிப்புகள்

"நாடகத்தில் 'ii : 3 : 88-89' என்றால் அங்கம் ii, களம் 3, வரிகள் 88-89 என ஆகும்.

கவிதை நூலின் பின் ': 10' என்று வரின் பாட்டு எண் என்றும், இலக்கண நூலின் பின் ': 10' என்று வரின் நூற்பா எண் என்றும், உலா முதலிய நூலின் பின் ': 10' என்று வரின் கண்ணி எண் என்றும் கொள்ளப் படும்.

நூலின் பெயருக்குப் பின்னால் பக்க எண் குறிப்பிடப் படவில்லையெனில் நூலினுள் பக்க எண் அச்சிடப்பட வில்லை என்று பொருளாகும்.[2]

2. (அ) இவ்ஆய்வேட்டில் எடுத்தாளப் பட்டுள்ள கம்ப ராமாயணப் பாடல்களின் எண்கள், கம்பன் கழகப் பதிப்பில் (1976) தரப்பட்டுள்ளவை.

(ஆ) ஆய்வின் இடையிடையே ஒற்றை மேற்கோள் குறிக்குள் தரப்பட்டுள்ள பாடல் வரிகள் உரை நடைத் தன்மையன.[3]

6. பொருளடக்கம் : முன்னுரை, முடிவுரை மற்றும் இயல்களின் பெயர்களை மட்டும் பொருளடக்கத்தில் குறித்தால் போதுமானதாகும். இயல்களில் அடங்கிய துணைத் தலைப்புகள், பத்தித் தலைப்புகள் அனைத்தை யும் பொருளடக்கத்தில் திணித்துவிட வேண்டும் என எண்ணுதல் ஆகாது. மூன்று நான்குப் பக்கங்களுக்குப் பொருளடக்கம் நீளுகின்ற ஆய்வேடுகளும் வருகின்றன இன்றியமையாத துணைத் தலைப்புகளையும் பத்தித் தலைப்புகளையும் மட்டும் ஒவ்வோர் இயலுக்கு முன்பும் வரிசைப்படுத்திக் கூறலாம். ஆய்வேட்டின் பொருளடக்கம் தெளிவாக இருக்க வேண்டும். பொருளடக்கத்தைப் பார்த்தவுடனேயே ஆய்வு இன்னது என்று விளங்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(எ-டு)

Contents[4]

	Pages
Headings and Sub-headings	I
The Chart of Transliteration	III
Introduction	1
Chapter	
1. A Glimpse of the poet's life	13
2. The Soul's struggle	18
3. The Awakening of the Self	32
4. The Purgation or Purification of the Self	58
5. The Illumination way	119
6. The Dark Night of the soul	160
7. The Unitive life	176
8. Symbolism	217
9. Conclusion	245
Appendix	I
Reference	V
Bibliography	VIII
Index	X

பொருளடக்கம் பின்வருமாறு சுருக்கமாக அமைவதும் உண்டு:

பொருளடக்கம்[5]

1.	அறிமுகம்	...	1
2.	வடிவம்	...	22
3.	பாத்திரப்படைப்பு	...	173
4.	சமுதாயம்	...	258
5.	காதல்	...	356
	முடிவுரை	—	
	துணை நூற்பட்டியல்	...	

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வேட்டிற்குப் பக்க எண் இடும்போது முன்னுரையிலிருந்து பக்க எண் இடத் தொடங்குவதா? இயல் தொடக்கத்திலிருந்து பக்க எண் இடுவதா என்று பலரும் ஐயுறுகின்றனர். ஆயின், இருமுறைகளுமே கையாளப்படுகின்றன. எம்முறையைப் பின்பற்றினாலும் தெளிவும் எளிமையும் தேவை.

முன்னுரையிலிருந்து பக்க எண் தொடங்கியுள்ளமைக்கு எடுத்துக்காட்டு வருமாறு :

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை	1—8
2.	அங்கதம் பற்றிய கோட்பாடுகள்	9—46
3.	பழந்தமிழ்ப் பாடல்களில் அங்கதம்	
	(அ) சங்கப் பாடல்களில் அங்கதம்	47—125
	(ஆ) பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் அங்கதம்	126—144
4.	இடைக்காலத் தனிப்பாடல்களில் அங்கதம்	145—219
5.	இக்காலக் கவிதைகளில் அங்கதம்	
	(அ) பஞ்சலக்ஷ்ணத் திருமுக விலாசத்தில் அங்கதம்	220—235
	(ஆ) மரபுக் கவிதைகளில் அங்கதம்	236—284
	(இ) புதுக்கவிதைகளில் அங்கதம்	285—369
6.	முடிவுரை	
	பின்னிணைப்புகள்	1—7
	துணை நூற்பட்டியல்	8—23

முன்னுரையைத் தனியே வைத்துப் பக்க எண் இடப்பட்டதற்குச் சான்று வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை[7]

		பக்கம்
	முன்னுரை	1—1
1.	புதுக்கவிதை	1—51
2.	காப்பியங்கள்	52—86
3.	நாடகங்கள்	87—123
4.	சிற்றிலக்கியங்கள் ...	124—167
5.	குழந்தைப் பாடல்கள் ...	168—193
6.	பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள்	194—222
7.	ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள்	223—235
8.	தனிப்பாடல்கள்	236—252
9.	சமுதாய சீர்திருத்த உணர்வு	253—284
	பின்னிணைப்புகள்	01—40
	கருவி நூல்பட்டியல்	01—41

ஆய்வின் போக்கிற்கேற்ப, இயல்களைப் பிரிவுகளாகவும், பாகங்களாகவும் வகைப்படுத்திப் பொருளடக்கத்தை அமைப்பதுண்டு.

பொருளடக்கம்[8]

(எ-டு)

முதல்பாகம்

		பக்கம்
	ஆய்வு முகவுரை ...	1—5
இயல் 1	கொள்கை விளக்கங்கள் ...	6—51
இயல் 2	பின்னணி விளக்கங்கள் ...	52—94
இயல் 3	பாரதி கவிதைகளில் சாதியமைப்பு மாற்றங்கள் ...	95—142
இயல் 4	பாரதிதாசன் கவிதைகளில் சாதியமைப்பு மாற்றங்கள் ...	143—205
இயல் 5	சாதியமைப்பு மாற்றங்கள்: பாரதி—பாரதிதாசன் ஒப்பாய்வு ...	206—214

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டாம் பாகம்

இயல் 1	பாரதி—பாரதிதாசன் கவிதைகளில் மேல்நிலை ஆக்கத்தின் சமுதாயக் கருத்துக்கள் ...	215—236
இயல் 2	பாரதி—பாரதிதாசன் கவிதைகளில் மேற்கத்திய ஆக்கத்தின் சமுதாயக் கருத்துக்கள் ...	237—255
இயல் 3	சமுதாயக் கருத்துக்கள் : பாரதி-பாரதிதாசன் ஒப்பாய்வு	256—284
இயல் 4	தேசியமும் கீழ்நிலை ஆக்கமும்	285—325
	ஆய்வு முடிவுரை	326—335
	பின் இணைப்பு	1—43
	துணை நூற்பட்டியல்	44—49

7. அட்டவணைகள் முதலானவை : ஆய்வேட்டின் பொருட் பகுதியில் இடம் பெறும் அட்டவணைகள், வரை படங்கள், கட்டவரைபடங்கள், புள்ளிவிவரப்படங்கள் ஆகியவை ஆய்வேட்டின் முற்பகுதியில் பொருளடக்கத்தை யடுத்துத் தனித்தனியாகக் குறிப்பிட வேண்டும். இவை ஆய்வின் ஆழத்தையும், ஆய்வாளரின் திறமையையும் வெளிக்காட்டுவனவாகும்.

ஆய்வினைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளங்க வைப்பதற்கு ஆய்வின் இடையிடையே இடம்பெறும் விளக்கப் படங்கள் உதவுகின்றன. பாடல்களின் எண்ணிக்கை, புலவர் களின் எண்ணிக்கை, சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை, குறிப்பிட்ட கருத்துக்களைக்கொண்ட கதைகளின் எண்ணிக்கை போன்ற இன்ன பிறவற்றை எடுத்துச் சொல்வதற்கு அட்ட வணைகளும் பட்டியல்களும் உதவுகின்றன. மேலும்எண்ணிக்கை களை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கவும், அவற்றிலிருந்து சில முடிவுகளைப் பெறவும் இவை உதவுகின்றன. நாட்டுப் புறவியல் ஆய்வில் ஒரு சமுதாயத்தில் குறிப்பிட்ட பிரிவினரின் செல்வாக்கை எடுத்து விளக்குவதற்குப் புள்ளிவிவரப்படங்கள் துணைசெய்கின்றன. இதுபோன்று சமுதாயத்தின் அல்லது இலக்கிய வகையின் வளர்ச்சியையும் எழுச்சியையும் வீழ்ச்சி யையும் காட்டுவதற்குக் கட்ட வரைபடங்கள் பயன்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு நூல்களிலிருந்து பெறப்படும் குறிப்புகள் மட்டு மல்லாது, அக்குறிப்புகளிலிருந்து ஆய்வுக்கு வலிமையூட்டும் சில தகவல்களைப் பெறுவதற்கு ஆய்வாளர் தாமே உருவாக்கும் அட்டவணைகளும் பட்டியல்களும் வரைபடங்களும் புள்ளி விவரப்படங்களும் உதவுகின்றன.

(எ-டு)

Tables[9]

1) Table I	Verb roots	... ...	175
I(a)	Finite verbs	... ...	181
I(b)	Imperatives	... ...	186
I(c)	Conjuctive participles	...	187
I(d)	Relative participles	...	191
I(e)	Aorist	... ...	193
I(f)	Infinitives	... ...	194
I(g)	Conditional participles	...	196
I(h)	Concessive participles	...	197
Table II	Verbal nouns ...	...	198
III	Nouns	... ...	201
IV	Sanskrit words...	...	204
V	Nouns derived from nouns	...	208
VI	Words other than nouns derived from nouns	...	209
VII	Coloquial words	...	210
VIII	Compounds etc...	...	213
IX	Case signs	... ...	214
X(a)	Declension of personal pronouns	...	215
(b)	Declension of Demonstrative & Interrogatives		216
XI	Demonstrative & Interrogatives		218

2) எயிலைக் காட்டும் பகுதிகள்[10]

எயில் (வரைபடம்)

வரைக்கட்டடம் (பொருள் திறங்கள், வரிகள்)

அட்டவணைகள் 36அ, 45அ, ஆ, 108அ, 129அ, 137அ.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3) ## List of Maps[11]

Map.		Page
1.	Madurai in 1756 AD	vii
2.	Temple and streets around ...	193

List of Illustration

Figure		Page
1.	Arrangement of Dik Gajas in Sundareswara's Sanctum ...	139
2.	Equinoxes and solstices ...	191
3.	Flag hoisting of Festivals ...	191
4.	Formation of Streets ...	193
5.	Sapta Suladhi, Simhanandana Talams ...	241
6.	Composition of a Lingam ...	263
7.	Shapes of Pithas ...	265
8.	Arrangement of sculptures in Kampattabi Mandapam ...	277

List of Plans

Plan		Page
1.	Temple at present ...	7
2.	Temple showing circumambulation ...	9
3.	Ayirakkal mandapam ...	63
4.	Putu mandapam ...	66
5.	Temple in 7th century ...	142
6.	Temple in twelth century ...	142
7.	Temple in thirteenth century ...	146
8.	Temple in fifteenth century ...	148
9.	Temple in sixteenth century ...	151
10.	Temple in sixteenth century-2period ...	156
11.	Temple in seventeenth, eighteenth and nineteenth centuries—period ...	162

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. சுருக்கக் குறியீட்டு விளக்கம் : ஆய்வேட்டில் அடிக்கடி இடம்பெறும் நீண்ட நூற்பெயர்களையும், குறிப்பில் இடம்பெறும் சுருக்கக் குறியீடுகளுக்கான (op. cit, Ibid., p., pp. போன்றவை) விளக்கங்களையும் இப்பகுதியில் தருதல் வேண்டும்.

(எ-டு) குறியீடுகள்[12]

ப. — பக்கம்
பக். — பக்கங்கள்
பதி. — பதிப்பு
பதிப். — பதிப்பாசிரியர்

நூல்கள்

அ.மொ.ம. — அரும்புகள், மொட்டுகள், மலர்கள்
கருநெகு — கருப்புக்குயிலின் நெருப்புக்குரல்
தஅபே — தமிழுக்கு அமுதென்று பேர்
தாஉம — ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது

English

n — note
n. d. — no date
p. — page
pp. — pages
AHSL — A History of Sanskrit Literature (S. K. De)
HIL — History of Indian Literature
HSL — A History of Sanskrit Literature (S.N. Dasgupta)
NHSL — A New History of Sanskrit Literature
SHSL — A Short History of Sanskrit Literatrue

9. ஆய்வு முன்னுரை

நெற்றிக்குத் திலகம் போல ஆய்வேட்டிற்கு முன்னுரை அமைகின்றது. ஆய்வின் நோக்கும் போக்கும் கருதி முன்னுரை அல்லது ஆய்வுச்சுருக்கம் குறுகியதாகவோ,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரிவானதாகவோ அமையும். 'இந்த ஆய்வு எதற்காகச் செய்யப்படுகின்றது?' என்ற அடிப்படை வினாவுக்கு ஆய்வு முன்னுரை விடையளிக்கிறது; ஆய்வுச் சிக்கலை எடுத்துக்காட்டிக் கருதுகோளை விளக்குகிறது; ஆய்வின் நோக்கத்தைப் புலப்படுத்துகிறது; ஆய்வின் அணுகுமுறையை எடுத்துச் சொல்கிறது; ஆய்வு முன்னோடிகளைத் தொட்டுக்காட்டி ஆய்வு வரலாற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது. முதன்மை மூலங்கள், துணைமை மூலங்கள், சார்பு மூலங்கள் எனும் ஆய்வு மூலங்களை முன்னுரை அறிமுகம் செய்கிறது. ஆய்வின் பொருட் பொதிவினை ஒவ்வோர் இயலாக இம்முன்னுரை விளக்கிக் காட்டுகிறது.

ஆய்வு முன்னுரையின் பகுதிகள் வருமாறு :

1. ஆய்வுத் தலைப்பு (சிக்கலும் கருதுகோளும்)
2. ஆய்வு நோக்கம் (ஆய்வாளர் என்ன வெளிப்படுத்த விரும்புகிறார் என்பது)
3. ஆய்வு அணுகுமுறை (ஒப்பியல், உளவியல், சமூகவியல் போன்றவை)
4. ஆய்வு முன்னோடிகள் (கால வரிசையில் கவனம் தேவை)
5. ஆய்வு எல்லை (குறிப்பிட்ட காலக் கட்டத்து இலக்கியம் / குறிப்பிட்ட ஊரில் வாழும் சமுதாயம் பற்றியது)

(எ-டு) **முன்னுரை**[13]

1. <u>ஆய்வுத் தலைப்பு</u>

> "தனி இலக்கியங்களைப் பண்படுத்தி, அவற்றைச் சிறப்பாகத் தோற்றுவிக்கவும், இலக்கியம் மேலும் திருந்திய வடிவம் பெறவும் இலக்கிய வகைமை பற்றிய கல்வி இன்றியமையாதது" ★

என்று இலக்கிய வரலாற்றில் இலக்கிய வகைமைகளின் இன்றியமையாமையைக் குறிப்பர். இன்று தமிழில் கிடைக்கும் தொன்மை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில், தமிழ் இலக்கிய வகைகளுக்கான மூலங்கள் காணக் கிடைக்கின்றன. துறைகள் எனப்படும் இவ்விலக்கிய மூலக்கூறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களினின்று பிற்காலத்தில் பல்வேறு இலக்கிய வகைகள் வளர்ச்சியுற்றன. இவ் வளர்ச்சி நிலைகளைக் கணிக்கும் முகத்தான் 'தொல்காப்பியமும் இலக்கிய வகைமை வளர்ச்சியும்' எனும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. ஆய்வு நோக்கு

"சமுதாயத்தின் நிலைக்கும் சூழ்நிலைக்கும் அவற்றில் உண்டாகும் இலக்கியத்திற்கும் மிக நெருங்கிய, விட்டு விலகாத தொடர்பு உண்டு."☆ என்று சூழலுக்கும் இலக்கியத் திற்கும் உள்ள உறவைக் குறிப்பர். இலக்கிய வகைகளின் வளர்ச்சியை அறியுமிடத்து இவ்வுறவின் நெருக்கம் புலனாகின்றது. எனவே இவ்வாய்வில் இலக்கிய வகைகளின் வளர்ச்சி, சூழல் நோக்கில் கண்டறியப்பட்டுள்ளது.

3. ஆய்வு அணுகுமுறை

இலக்கிய வளர்ச்சி, உயிரின, பயிரின வளர்ச்சியோடு ஒப்புநோக்கி உண்மை காணும் பெற்றியுடையது. இவ்வொப்பு நோக்கு மேலை இலக்கியத்தில் அரிஸ்டாடில் காலத்தில் கால் கொண்டது; இன்று இவ்வாய்வு வளர்ச்சி பெற்றுள்ளது. மேலும், இவ்வாய்வின் போக்கிற்கு டார்வினுடைய (Charles Darwin) கூர்தலறக் கோட்பாடு துணையாக அமைந்தது. இக்கோட்பாட்டினை அடியொற்றி மேலை இலக்கியத்தில் இலக்கிய வகைகளின் வளர்ச்சி கணித்தறியப் பட்டுள்ளது. இவ்வாய்விலும் இத்தகு அணுகு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

4. ஆய்வு முன்னோடிகள்

தமிழ் இலக்கிய வகைகள் பற்றிய ஒரு தனிநூலினை மு. வரதராசன் எழுதி வெளியிட்டார் (இலக்கிய மரபு : 1960). மேலை இலக்கிய வகைகளுடன் தமிழ் இலக்கிய வகைகளைத் தமிழண்ணல் ஒப்பிட்டுக் கண்டுள்ளார் (சங்க இலக்கிய ஒப்பீடு — இலக்கிய வகைகள் : 1976). சங்க காலந் தொட்டுத் தற்சமயம் வரையிலான இருநூறுக்கும் மேற்பட்ட இலக்கிய வகைகளை ச. வே. சுப்பிரமணியன் திறனாய்ந்துள்ளார் (தமிழ் இலக்கிய வகையும் வடிவம் : 1984). பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் இலக்கிய வகைகளின் திறனாய்வினை ந. வீ. செயராமன் தமது நூலில் மேற்கொண்டுள்ளார் (பாட்டியலும் இலக்கிய வகைகளும் : 1981).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்ஙனம் முழுநூலாக அன்றித் தனிக்கட்டுரை வடிவிலும் இலக்கிய வகைகளைக் குறித்துப் பலர் ஆராய்ந் துள்ளனர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர் : திருப்பள்ளியெழுச்சி: 1968; முத்துக்கோவை : மரபில் நேர்ந்த மாறுதல்கள் : 1981), தமிழண்ணல் (வையை 1: தமிழ் இலக்கிய வகைகள்: 1974; முத்துக்கோவை : சங்க இலக்கியம் — பாட்டு வடிவமும் யாப்பும்: 1981; பொதிகை 2 : தொல்காப்பியம் உணர்த்தும் இலக்கிய வகைமைப் பண்புகள்: 1980), வ. சுப. மாணிக்கம் (சிந்தனைக் களங்கள் : திருக்கோவைப் புரட்சி, பதிற்றுப் பத்து : 1975), ச. வே. சுப்பிரமணியன் (இலக்கிய உணர்வுகள் : இலக்கிய வகையும் வடிவமும் : 1978) சூ. இன்னாசி (முத்துக்கோவை: குறவஞ்சி வளர்ச்சி: 1981), ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

சங்க இலக்கிய வளர்ச்சியை அறிஞர்கள் சிலர் திணை நோக்கிலும் ஆராய்ந்துள்ளனர். கதிர் மகாதேவன் (பழந்தமிழர் வீரப் பண்பாடு), நா. செயராமன் (சங்க இலக்கியத்தில் பாடாண்திணை), மா. நவநீதகிருஷ்ணன் (சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை) ஆ. இராமகிருஷ்ணன் (புறத்திணை வளர்ச்சி), கோ. சிவகுருநாதன் (வாகைத் திணை), சீ. பாலகிருஷ்ணன் (சங்க இலக்கியத்தில் வாகைத் திணை) என்போர்தம் ஆய்வேடுகள் திணைவளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுவன.

தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதியோருள், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (A History of Tamil Literature : 1965), ஆ. வேலுப்பிள்ளை (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்: 1969), கமில் சுவலபில் (Tamil Literature), தமிழண்ணல் (புதிய நோக்கில் இலக்கிய வரலாறு: 1983) ஆகியோர் வகை நோக்கிலான வளர்ச்சியைக் குறிப்பின் சுட்டியுள்ளனர்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியை அறிய முயன்றோருள் சிலர் குறிப்பிட்ட திணைகளின் வளர்ச்சியை அறிந்தனர்; மேலும் சிலர் குறிப்பிட்ட துறைகளின் வளர்ச்சியைச் சுட்டினர்; வேறு சிலர் குறிப்பிட்ட இலக்கிய வகைகளின் (சிற்றிலக்கியங்கள்) வளர்ச்சியைக் காட்டினர். தொல் காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ள அகத்திணை, புறத்திணை களின் துறைகள் பெற்ற வளர்நெறிகள் முழு அளவில் இதுகாறும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வகையில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியத்தில் காணப்படும் இலக்கிய மூலக்கூறுகளின் வளர்ச்சியைச் சூழல் உணர்வோடும், ஒப்பிலக்கிய நோக்கோடும் அறிவியல் நெறி நின்றும் கணிக்கும் முயற்சி முதன் முறையாக இவண் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. ஆய்வுக்களம்

தொல்காப்பியத்தில் காணப்படும் புறத்திணை இலக்கியமூலக் கூறுகள் பு. வெ. மாலையில் பெற்ற வளர்ச்சியும், எட்டுத்தொகை (புறநானூறு, பதிற்றுப்பத்து), பத்துப் பாட்டு (புறப்பாடல்கள்), சிலப்பதிகாரம் (புறக்கூறுகள்) ஆகியவற்றில் வகைமைகளாகவும், வகைகளாகவும் வளர்ந்த நிலைகளும் —

பதினெண்கீழ்க் கணக்குக் காலத்தில் மாற்றம் பெற்ற சங்க மரபுகள், பக்தி இலக்கியக் காலத்தில் புதுமெருகு பெற்றுச் சங்கமரபுக்கும் பிற்கால மரபுக்கும் பாலமாக அமைந்த வளர்நிலைகளும்—

பிற்காலத்தில் இலக்கிய வகைகள் பெற்ற வளர்ச்சியும், புதிய வகைகளின் தோற்றமும் (புறம் : பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், ஆற்றுப்படை; அகம் : கோவை, உலா, தூது; அகமும் புறமும் : கலம்பகம்)—

மேற்சுட்டிய வகைகளோடு தொடர்புடைய பிற வகைகளின் வளர்ச்சியும் (பள்ளியெழுச்சி : பாவைப்பாடல்; பிள்ளைத்தமிழ் : குழமகன்; கோவை : காதல்; உலா:பவனி; தூது : விலாசம்) இவ்வாய்வின் களங்களாக அமைந்துள்ளன.

6. ஆய்வு மூலங்கள்

அ. முதன்மை மூலங்கள்

தொல்காப்பியம் (அகத்திணையியல், புறத்திணையியல்), பு. வெ. மாலை மூலமும் சாமுண்டி தேவநாயகரியற்றிய உரையும், புறநானூறு மூலமும் பழைய உரையும், பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், சிலப்பதிகாரமூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் இவ்வாய்விற்குரிய முதன்மை மூலங்களாகும்.

ஆ. துணைமை மூலங்கள்

தமிழில் தொல்காப்பியம் — புறத்திணையியல் (உரைவளம்), களவியல், கற்பியல், பொருளியல், அகத்திணை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யியல், இறையனார் அகப்பொருள் (நக்கீரர் உரை) ஆகிய உரைநூல்களும், ஆங்கிலத்தில் Beyond Genre (Hernadi, Paul), Kinds of Literature, (Fowler, Alastair) Literature as a system (Guillen, Claudio) எனும் நூல்களும் தமிழ் மற்றும் மேலை இலக்கிய வகைகளைப் பற்றிய திறனாய்வும், அவற்றின் வளர்ச்சியும் பற்றி வெளிவந்த பல்வேறு நூல் களும் கட்டுரைகளும் இவ்வாய்வுப் போக்கிற்கு அரண் செய்யும் துணைமை மூலங்களாக அமைந்துள்ளன.

இ. சார்பு மூலங்கள்

சொல்லாய்விற்காகவும், கருத்து விளக்கத்திற்காகவும், இலக்கிய வகை விளக்கத்திற்காகவும் பின்வரும் களஞ்சியங் களும், அகராதிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன :

(அ) தமிழ் : தொல்காப்பியக் களஞ்சியம், இலக்கிய வகை அகராதி, மேலை இலக்கியச் சொல்லகராதி, சிற்றிலக்கியப் புலவர் அகராதி.

(ஆ) ஆங்கிலம் : A Glossory of Literary Terms, The New Century Handbook of English Literature, English Tamil Dictionary (A. C. Chettiar), A Dictionary of Modern Critical Terms, The Oxford Companian to Classical Literature, The Classified Catalogue of Tamil Printed Books, Princeton Encyclopedia of Poetry and Poetics, Dictionary of World Literary Terms, Dictionary of History of Ideas.

7. ஆய்வின் பொருட்பொதிவு

பகுதி I

இயல் 1 இலக்கிய மூலக்கூறு > வகைமை > வகை — வளர்ச்சி விளக்கம்

இயல் 2 இலக்கிய வகைகளின் கருத்துப் பொருள்கோள்

பகுதி II

இயல் 3 அக இலக்கிய வகை வளர்ச்சி

பகுதி III

இயல் 4 புற இலக்கிய வகை வளர்ச்சி

பகுதி IV

இயல் 5 கலம்பக வகை மலர்ச்சி

இயல் 6 தமிழ் இலக்கிய வகைமை வளர்ச்சியில் காணும் உண்மைகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10. ஆய்வின் பொருட்பொதிவு (Body of the thesis)

தந்தத்தில் நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பத்தைச் செதுக்குவது போன்ற கவனம் ஆய்வேட்டை எழுதும்போது தேவைப்படுகின்றது. பயனற்ற எந்த ஓர் சொல்லோ, தொடரோ ஆய்வேட்டில் இருத்தலாகாது. தொடர்பற்ற எந்த செய்தியும் ஆய்வேட்டில் இடம்பெறலாகாது. 'அங்குலம் அங்குலமாகச் செதுக்குதல், என்பது ஆய்வேட்டிற்கும் பொருந்தும்.

1. ஆய்வேட்டின் ஒவ்வோர் இயலையும் எழுதத் தொடங்கு முன், எழுதத் திட்டமிட்டுள்ள இயலின் தலைப்புக்கேற்றவாறு குறிப்புகளை வரன்முறைப் படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பிட உத்தேசித்துள்ள இயல் நுவல் பொருள்களை வரிசைப் படுத்திக் கொண்டால் எழுத்தில் தெளிவும் அழுத்தமும் இருக்கும். சான்றாகப் 'பக்தி இலக்கியப் பாயிரங்கள்' என்ற இயலை எழுத முனைபடுவர், தாம் எழுத எண்ணியவற்றைப் பின்வருமாறு வரன்முறைப் படுத்துகிறார்:

(எ-டு) **4. பக்தி இலக்கியப் பாயிரங்கள்**[14]

4.1.0.	பாயிரங்கள்
4.1.1.	சிறப்புப் பாயிரங்கள்
4.1.1,1.	இலக்கியங்கள்
4.1.1.1.1.	திருவாசகம்
4.1.1.1.2.	திருக்கோவையார்
4.1.1.1.3.	நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
4.1.1.1.3 1.	தனியன்கள்
4.1.1.1.3.1.1.	பொதுத் தனியன்கள்
4.1.1.1.3.1.2.	முதல் மூவாயிரத் தனியன்கள்
4.1.1 1.3.1.3	திருவாய் மொழித் தனியன்கள்
4.1.1.1 3.1.4.	ஆசார்ய ஹிருதயத் தனியன்கள்
4 1.1.1.3.1.5.	உபதேச ரத்தினமாலைத் தனியன்
4.1.1.1.3 1.6.	பிற தனியன்கள்
4.1.1.1.3 2.	தனியன்களில் நயம்
4.1 2.	தற்சிறப்புப் பாயிரம்
4.1.2.1.	இலக்கியம்

. . . .

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4.1.2 1.1. திருமந்திரம்
4.2.0. பாயிரக்கூறுகள்
4.2.1. திருக்கடைக் காப்பு
4,2.1.1. இலக்கியங்கள்
4.2.1.1.1, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்
4.2.1.1.2. சம்பந்தர் தேவாரம்
4.2.1.1.3. சுந்தரர் தேவாரம்
4.2.1.1.4. அப்பர் தேவாரம்
4.2.2. மகுடம்
4.3.0. முடிவுகள்

இதன்மூலம் இவ்வியலின் பொதுநோக்கு ஒன்றும், சிறப்பு நோக்குகள் பலவும் புலனாகின்றன அன்றோ? மேலும் மேற் கண்டவாறு எண்ணிட்டுக் கொள்வதும் இயலின் பல்வேறு துணைப் பிரிவுகளையும் பல்வேறு உட்பிரிவுகளையும் இணைத்துக் காட்ட வல்லதாகும். பக்தி இலக்கியப் பாயிரங் களின் வகைபாட்டினை அறிந்து கொள்வதற்கும் இத்தகு முன் வரைவுத் திட்டம் துணை செய்கின்றது. பொருள் தெளிவு கருதி இம்முன் வரைவுத் திட்டத்தையே ஒவ்வோர் இயலின் முன்பும் தந்துவிடுதல் நன்று.

2. ஆய்வேட்டில் கருத்து முரண்பாடுகள் உண்டாதல் கூடாது. *'கோவலர் வாழ்க்கை கொடும்பாடு இல்'* என்று குறித்து விட்டு, இயலின் முடிப்புரையில் *'...இத்தகு காரணங்களால் கோவலர் வாழ்க்கை கொடுமைநிறைந்ததாக இருக்கக் காண்கிறோம்'* என்று எழுதுகின்றனர். கருத்து முரண்பாடு தோன்றுமிடங்களில் முரண்படுவார் கூற்றையும் சான்றாக எடுத்துக்காட்டி ஆய்வாளர் கருத்தையும் அங்குக் குறிப்பிட வேண்டும்.

(எ-டு) **கொடிநிலை என்ற பாடமும் பொருளும்**[15]

தற்காலத்துக் கொடிபிடித்துச் செல்லும் கோலத்தைக் கண்டு, அக்கால மறவரும் கொடிபிடித்துச் சென்றனர் என்று கருதிப்போலும் கொடிநிலை எனப்பாடமோதிப் பொருள் உரைத்தனர். வெட்சிப்பூசலைக் குறும்போர் எனக் கருதாமல், பெரும்படையெடுப்பு என்றும், அதனைப் படையெடுப்பின் முன்னோட்டம் (Prelude) என்றும் கருதுவதால் இவ்வாறு பொருள் காண நேரிட்டது. வெட்சி-தனிப்பெரும்போர் அன்று; போர்த் தொடக்கமும் அன்று; அடங்கா மறவர் குழு தம்முள் பசுக்களவிற்காக நிகழ்த்திக் கொண்ட பூசலே[92] ஆதலால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'போர்த் தொடக்கத்தில் கொடிபிடிப்பர்' என்ற கருத்தில் பொருள் உரைப்பது பொருந்துமாறில்லை. அன்றியும் கொடியை அரசர்க் குரியதாகவே தொல்காப்பியர் அறிவிப்பர்.[93] முனைஞர் இடையே நிகழும் போரில் கொடிநிலை அக்காலத்தில் அத்துணைச் சிறந்திருக்க வாய்ப்பில்லை.

கொடிநிலை என்ற பாடமும் பொருளும் காண சோமசுந்தர பாரதிக்கு பிறிதோரிடத்தில் அவர் கொண்ட பாடமே அடிப்படைக் காரணம். பாடாண்திணையில் (33), பிறர் எல்லாம் 'கொடிநிலை, கந்தழி, வள்ளி' என்று கொள்ள, பாரதி, 'கொடி நிலை, காந்தள், வள்ளி' என்று பாடம் ஓதினர். காந்தள், வள்ளி என்பன முன் நூற்பாக்களில் கூறப்பட, கொடிநிலை ஒன்றுமே கூறப்படாதிருத்தலைக் கண்ட அவர் இந்நூற்பாவில்,மறங்கடைக் கூட்டிய கொடிநிலை' என்று பாடம் காட்டினர்[94]

வெட்சியைப் பூசல் என்றே கொள்ள வேண்டி இருத்த லானும், கொடியை ஊர் மறவர் எல்லாம் பிடித்தார் என்பது தொல்காப்பியர்க்கு முற்பட்ட பழக்கம் அன்று என்பதனாலும் தொல்காப்பியமும் கொடியை அரசர்க்குரிய ஒன்றாக அமைத்த லானும், அனைத்து மறவர்க்குரியதாக அவர் அமைக்காமை யானும், சோமசுந்தரபாரதி தாம் பாடாண்திணை நூற்பாவிற்கு ஓதும் பாடபேதம், பழம்பிரதிகள் எதனுள்ளும் காணப்படாமை யானும் கொடிநிலை என்ற பாடம் பொருத்தமற்றதாகிறது நச்சர், 'குடிநிலை' என்பதைத் 'துடிநிலை' எனத் திரித்ததாகக். கூறுவதும் பொருந்துமாறில்லை. 'குடிநிலை' என்று பாடம் ஓதிப்பொருள் உரைக்கும் இளம்பூரணத்திலேயே 'துடிநிலை' வேறு பாடமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே 'கொடிநிலை' என்பது பழம்பாடம் அன்று என்பதும், தொல்காப்பியர்க்குப் பொருந்துவது அன்று என்பதும், தெளிவாகும்.''

3. ஆய்வாளர், 'நான் என்ன சொல்ல முற்படுகின்றேன்.' என்று ஆய்வேட்டில் விளக்கம் தருவது முறையாகாது. இது போன்ற தன்நிலை விளக்கங்களாக ஆய்வேடுகள் சில உருவா கின்றன. சான்றாக,

''...நாட்டுப் பாடல்களில் குறிப்பாகவும் சிறப்பாகவும் காணப்படும் நம்பிக்கைகள் பற்றிய சில செய்திகளை முதற்கண்கூற ஆய்வாளர் கருதுகிறார். அடுத்த இயலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> அவர்கள் தம் பழக்கவழக்கங்களாகிய மரபுகளைப்பற்றிக் கூறவிருக்கிறார். குழந்தைப்பேறு,— போன்ற நம்பிக்கைகளின் அடிப்படையில் எழுந்த சில நிகழ்வுகளை இங்கு ஆய்வாளர் நிறுவ முயலுகிறார்."

என்று ஓர் அண்மைக்கால ஆய்வேட்டில் ஆய்வாளர் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். ஆய்வாளர் தம்மையே தேர்வாளராகக் கருதி ஆய்வேட்டிற்கான மதிப்புரையை வழங்குவதுபோல் இது தோன்றுகிறதல்லவா?

4. 'முதற்கண் காண்போம்'; 'எடுத்துக் கொள்வோம்', 'நன்கறிந்தோம்' போன்று ஆசிரியர் மாணவரை உளப்படுத்திக் கூறுவது போலவும், மேடைப் பேச்சாளர் மக்களை விளித்துப் பேசுதல் போலவும் ஆய்வாளர் எழுதுதல் கூடாது. இப்படி எழுதுதல் தேர்வாளரையும், ஆய்வேட்டைப் படிப்போரையும் தம் கருத்துக்கு வலிந்து உளப்படுத்துவது போலாகும்.

> "—போன்றோர் கூற்றால் வலியுறுத்தப்படுதலை இவ்வியலின் கண் நன்கறிந்தோம்"

> "...போன்றவற்றை முதலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். பின்னர்...சடங்குகளை இரண்டாவது நிலையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்"

என்பது போன்ற தொடர்கள் முற்சுட்டிய ஆய்வேட்டில் காணப் பெறுவன. இவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

5. சூளுரைத்தலும், ஆவேசமாக மொழிதலும் ஆய்வேட்டிற்கு ஆகாது. ஆய்வேட்டில் ஆய்வாளரின்உணர்ச்சியோ சார்நிலையோ வெளிப்படக் கூடாது என்பர்.

> "மனிதர்களின் வாழ்க்கைக்கு முடிவு மரணம் என்றாலும் அந்த மரணத்தில் சமூகச் சீர்கேடுகளின் தொடக்கமே பேசப்பட்டு வருகிறது. அக்கொடுமைகளுக்கு நாம் ஒப்பாரி வைத்தாக வேண்டும்"

> "தமிழ்ச் சமுதாயம் விதவைகளுக்கு இழைக்கும் கொடுமைகளைச் சொல்லி முடியாது. பெண்களை ஆண்கள் கேவலப்படுத்தும் இக்கொடுமை என்று ஒழிகின்றதோ அன்றே தமிழ்ச் சமூகத்திற்கு விடிவுகாலம்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வாளர் தாம் உணர்ச்சி வயப்பட்டது மட்டுமின்றித் தேர்வாளரையும், ஆய்வேட்டைப் படிப்பவரையும் அழகியல் உணர்வு தோன்ற ('கொடுமைகளுக்கு ஒப்பாரி', 'கொடுமைகளைச் சொல்லி முடியாது') உணர்ச்சி வயப்படுத்த முயலுகின்றார்.

6. சொற்களை ஆளுவதிலும் எடுத்துக்காட்டுகள் தருவதிலும் செம்மையும் நேர்த்தியும் வேண்டும். சொற்களின் ஆட்சியாலும், எடுத்துக்காட்டுகளின் சிறப்பாலும் ஆய்வேட்டின் உயர்வு புலப்படுமாறு செய்தல் வேண்டும்.

"ஆயிரந்தான் தன் கணவன் வீட்டிலிருந்தாலும் தன் தாய் வீட்டிலிருந்து வரும் ஓர் அழுகல் வாழைப்பழத்தையே ஆவலுடன் எடுத்துத் தின்பாள்"

ஓர் ஆய்வேட்டில் இடம் பெற்றுள்ள இத்தொடர் உயர்வு நவிற்சியைக் காட்டுகின்றது. 'பொன்னும் மணியும் தன் கணவன் வீட்டில் கொட்டிக் கிடந்தாலும் தாய்வீட்டிலிருந்து வரும் சங்கு மாலையையே ஆவலுடன் எடுத்து அணிந்து கொள்வாள்' என்று ஆய்வாளர் எடுத்துக் காட்டியிருக்கலாம்.

7. தகுந்த சான்றுகள் இன்றி மூடப்பழக்க வழக்கங்களுக்கும் கருத்துக்களுக்கும் ஆய்வேட்டில் ஊக்கம் தரலாகாது. 'தனக்குப் பாதுகாப்பற்ற தன்மையை நினைத்தும், சமூகம் தனக்கு இழைக்கவிருக்கும் கொடுமையைக் கண்டஞ்சியுமே ஒரு...குலத்தாய் அல்லது மனைவி; கணவனுக்கு முன்னே இறந்துபோக ஆசைப்படுகிறாள் என்பதில் தவறில்லை' என்று ஓர் ஆய்வாளர் எழுதுகிறார் ஆய்வாளர்தம் உள்ளக்கிடக்கை அவரையும் அறியாமல் இதுபோன்ற கருத்துக்களில் புலனாகிவிடுகின்றது.

8. பிறருடைய கூற்றுக்களை மட்டுமே சான்றாக வைத்துக் கொண்டு அறிவுநோக்கற்ற செய்திகளை ஆய்வேட்டில் தரலாகாது. 'ஆய்வேடு அறிவுலகிற்கு ஒரு கொடை' என்பதை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். 'ஆய்வேடு அறிவுலகிற்கு ஒரு கேடு' என்பதாக உருவாகக் கூடாது. ஓர் ஆய்வாளர்,

"...பெண்கள் அரசமரத்தைச் சுற்றிவந்து வழிபாடு செய்வதன் மூலமும் வெள்ளிக்கிழமைவிரதம், பாம்புப்புற்றுவணக்கம் செய்வதன் மூலமும் மலட்டுத்தன்மையைப் போக்கிவிட முடியும் என்று நம்புவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கர் சென்குப்தா போன்றோர் கூற்றால் வலியுறுத்தப்படுதலை இவ்வியலின் கண் நன்கறிந்தோம்" என்று விவாதத்திற்குரிய ஒரு செய்தியை விவாதிக்காமலேயே பிறர் கூற்றுக்களை மட்டும் சான்றாகக் கொண்டு 'சட்'டென ஒரு முடிவுக்கு வருகிறார்' தகவலாளிகளை பேட்டி கண்டும், களஆய்வு செய்தும், இவை குறித்து மருத்துவர் கருத்துக்களைக் கேட்டறிந்தும் பிறர். கூற்றுக்களைச் சான்று காட்டியும் ஆய்வாளர் தம் கருத்தைக் கூறவேண்டும். ஆனால் ஆய்வாளரின் நழுவல் போக்கினை இது காட்டுகிறது. மற்றோர் ஆய்வேட்டில், மேற்கோள்களாகக் காட்டி ஆய்வாளர் தம் கருத்தைச் சொல்லாமல் நழுவும் பகுதி யில் 'இந்த அறிஞர்கள் மேற்கோளுக்காகக் கூறியிருக்கலாம் அங்கதமா நகையா என்றோ ஆய்ந்து கூறினாரா?' என்று தேர்வாளர் குறிப்பு எழுதியுள்ளார். கருத்தினை விவாதித்து நிலைநாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் தமக்கு உண்டு என்பதை ஒவ்வோர் ஆய்வாளரும் உணர வேண்டும்.

9. வழக்குச் சொற்களை ஆய்வேட்டில் பெய்து எழுதுதல் கூடாது. இன்று வெளிவருகின்ற ஆய்வேடுகளில் இத்தகு வழக்குச் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

(எ-டு) 'எனவே மஞ்சளையும் சுண்ணாம்பையும் எடுத்துக் கண்ணேறுகழித்தது தமிழனின் தனித்திறமைதான்போலும்,

'கிடை என்பது தனி ராஜ்ஜியம்'

'நம்மை இவ்வுலகில் தோற்றுவிக்க நமது அன்னை பட்ட பாடு கொஞ்ச நஞ்சமன்று!'

'பிள்ளை அழாவிட்டால் என்னமோ ஏதோவென அவள் மனம் அடித்துக் கொள்ளும்'

'புலமைச் சான்றோர் இப்பாவில் நின்று விளையாடி யிருக்கின்றனர்'

10. ஆய்வேட்டிற்கென்று தனிநடை உண்டு. ஆய்வாளர்க்கு அங்கு நடைச் சுதந்திரம் கிடையாது; கருத்துகளுக்கே அங்கு முதலிடம்; ஒவ்வோர் எழுத்திற்கும் ஆய்வேடு ஏதேனும் தொடர்பு இருக்கவேண்டும். இதனால்தான் ஆய்வு நெறிமுறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகுப்புகளில் புலப்பாட்டு நெறியைப் பெரிதும் வற்புறுத்து கின்றனர். ஆனாலும் பல ஆய்வாளர்கள் இதனை மறந்து கதை நடையையும், கவிதை நடையையும், நாடக நடையையும், பின்பற்றுகின்றனர் :

(எ-டு) குழந்தையைப் பெற்ற தாய்க்கு எத்துணை மகிழ்ச்சி! எவ்வளவு பெருமிதம்! குழந்தை அவளுடைய இன்பக் கனவுகளின் உரு! பண்புடைய மக்களை, அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களை, நம்மிலும் அறிவுடைய மக்களை, சான்றோனாக விளங்கக்கூடிய மக்களைப் பெறத் தாயும் தகப்பனும் நினைத்த நினைப்புகள் எத்தனை! செய்த தவங்கள், தர்மங்கள், தரிசித்த தலங்கள், ஏற்றிய விளக்குகள் எத்தனை எத்தனையோ?

'காதலிக்க நேரமில்லை, இடமில்லை, நாடில்லை, உலகில்லை, இறப்பில்லாத நிமிடமில்லை'

'வேறு எதனைக் கேட்டார் தெரியுமா?'

'அவர் மிகுந்த அன்புடையவர். எப்படி?'

'மங்கல நிகழ்ச்சிக்கு மட்டும் அழைக்கப்படுவனல்லன் இறைவன், அவல நிகழ்ச்சிக்கும் அழைக்கப்படுபவனே. இங்கும் இப்பொழுது மாரடிக்கத் தொடங்கிவிட்டார்கள்'

'ஆயர்களின் தலையாய பணிகளில் ஒன்று மேய்ச்சல். நம்ப கோவிந்தனும் மாடு மேய்க்கப் புறப்பட்டார்'

11. ஆய்வேட்டில் பொதுப்படையாகக் கூறுதலோ, சுற்றி வளைத்துக் கூறுதலோ கூடாது. கருத்துகளும் தொடர்களும் நறுக்குத் தெறித்தாற்போல் இருத்தல் வேண்டும். பல்வேறு நிறங்கொண்ட (VIBGYOR) ஒளிக்கற்றைகள் ஓரிடத்தில் குவிந்து ஆற்றல் மிக்கதாக விளங்குதல்போல, பல்வேறு தொடர்களின் இணைவாகவும், பல்வேறு கருத்துகளின் தெளிவாகவும் ஆய்வேட்டில் இடம்பெறும் தொடரும் கருத்தும் விளங்க வேண்டும். 'வழிபாட்டின்மூலம் இறைவனை அடையலாம்' என்று சொல்ல வரும் ஆய்வாளர், மனதில் தேங்கியிருக்கும் எண்ணங் களை வடிகாட்டாமல் இறக்கிவிடுகின்றார் :

'வழிபாட்டின்மூலம் இறைவனை அடையலாம் என்பதும் ஒரு தத்துவம். வயது ஏறினால் சிந்தனையும் மாறி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடுகிறது. வாழ்க்கையும் நாடகம். இதில் வாழ்வதும் ஆள்வதும் மாள்வதும் நாடகக் காட்சிகள். அத்தனையும் மாயம். அழிந்து விடுகின்ற விளையாட்டு. இறைவனே உண்மையானவன். அவனையே அணுக வேண்டும்'

'கிராமத்து மக்களும் இந்த மேல் உலக வாழ்வு 'வீடு என்று கருதுகின்றனர். இவ்வுலக வாழ்வும் வீடுதான்' ஆனால் இது குச்சு வீடு. மறுவாழ்வே மச்சுவீடு. மச்சு வீடு அடைய இறைவனே துணை செய்ய வேண்டும். அவன் இல்லாமல் அவ்வுலக வாழ்வினை அடைய முடியாது'

'சொல்லுகிறாள்' என்று சொல்ல வந்தவர் 'சொல்லாமல் சொல்லிச் செல்கிறாள்' என்று சுற்றி வளைக்கிறார். 'விளக்கு கின்றன' என்று எழுதுவதற்குப் பதில் 'தொழிற்பாடல்களும் காதற்பாடல்களும் விளக்காமல் செல்லவில்லை' என்று விளக்கு கிறார். கள ஆய்வில் கண்ட உண்மை யாதெனின்...' என்றும் இப் பாடல்களால் அறியக்கிடப்பன யாவையெனின்' என்றும் கட்டியம் கூறுகிறார். இத்தகு நடைகளைத் தவிர்க்கப் பழகுதல் வேண்டும்.

12. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி போன்ற 'இலக்கிய நயங்'களை ஆய்வில் காட்டலாகாது. ஆய்வாளரது எண்ணங் களின் இயல்பான வெளிப்பாடே இத்தகுக் குறைகளுக்குக் காரணமாகின்றது.

எ-டு) 'தன் தாய்வீட்டைப் பற்றியும், உடன்பிறந்த அண்ணன் தம்பிமார்களைப் பற்றியும் பெருமிதத்தோடு எண்ணி எண்ணிப் பூரிப்பார். 'பிறபெண்கள் அனைவரும் தாண்டித் தாண்டிக் கேட்டுத்...', 'மலடி மலடி என்று கூறி மருக வைப்பதால்'

13. 'ஐயமில்லை', 'அறுதியிட்டுக் கூறலாம்', 'மறுக்கமுடியாது' போன்ற ஆணை நடைகள் ஆய்வில் கூடா.

(எ-டு) "சமூக இயல் அறிஞர்களுக்கு ஒரு குறிப்பிட்ட (...) சமுதாயத்தைப் பற்றி அறிந்து கொள்ள அச்சமுதாயத் தின் (...) நாட்டுப்புற இலக்கியம் ஒரு தலையாய சான்றாதாரமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'...அவையில் கூடியிருக்கும் மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்து மனம் உருக வைக்கவும், சிந்திக்க வைக்கவும் பாடல் நயங்களைக் கேட்டு மகிழவைக்கவும் செய்கின்றது என்பதில் வியப்பேதும் இல்லை'

14. ஆய்வேட்டின் தொடரமைப்பிலும் கருத்திலும் முன்னுக்குப்பின் முரண் தோன்றலாகாது.

(எ-டு) 'சல்லி என்ற பெயருடைய — வீரன் ஒருவன் இருந்தான் எனவும், அவன் பெயராலேயே 'சல்லிக்கட்டு' என்று இந்த விழா வழங்குகிறது எனவும் சிலர் கூறுவார்கள் (கலைக்களஞ்சியம், தொகுதி—4, ப. 517). ஆயினும் இதற்கு எவ்வித ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை'

கலைக்களஞ்சியத்தைச் சான்றாகக் காட்டிவிட்டு 'இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை' எனக்குறிப்பது பொருந்துமாறில்லை. இப்பகுதியில் இறுதிக்கூற்று தேவையற்றதாகும்.

இதுபோன்றே கொடும்பாடு இல் என்று ஆய்வின் பொருட் பகுதியில் கூறிவிட்டு 'கோவலர் வாழ்க்கை கொடுமை நிறைந்த தாகக் காண்கிறோம்' என்று முடிவுரையில் கூறுதல் கூடாது.

15. ஆய்வில் உறுதி வேண்டும்; ஊகம் கூடாது.

"... *என்ற வைப்புமுறை ஒருவேளை தொல்காப்பியரைப் பின் பற்றியதாக இருக்கலாம்*" என்று ஆய்வேட்டில் கண்டுள்ள தொடருக்கு 'ஊகம் கூடாது' என்றே தேர்வாளர் குறித்துள்ளார்

16. ஆய்வுச்சிக்கல்களுக்கு விடை காணாமலோ ஐயங்களுக்குத் தீர்வு காணாமலோ மேற்செல்லுதல் கூடாது.

(எ-டு) 'பாடுதற்கு எளிது என்பதால் எண்ணிக்கை மிகுந்தது' என்று எண்ணின் அற்றன்று. அப்படி ஆயின் இதனினும் எளிய இணைக்குறள் ஆசிரியம் போன்ற எளிய பல பாவகைகள் பலவாகிக் குவிந்திருக்க வேண்டுமே? அப்படி இல்லை என்பதால் எளிமை நோக்கி எண்ணிக்கையில் அவை பெருகவில்லை எனத்தெரிகிறது. இதற்கு வேறு காரணந்தான் என்ன?

'கலம்பக உறுப்புக்கள் பதினெட்டுத்தாமா? குறைவா? கூடுதலா? என்ற கேள்விக்கு நிலையானவிடை இன்று வரை இல்லை'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பிரபந்தம் 16 என்ற வழக்கும் எப்படியோ புகுந்துவிட்டது'

17. தம்முடைய திறமையைத் தாமே மெச்சிக் கொள்ளும் விளம்பரநடையும் (தம்பட்ட நடை) ஆய்வில் கூடாது. ஓர் ஆய்வேட்டில் ஆய்வாளர் தம்முடைய சிறப்பைப் பின்வருமாறு கூறிக் கொள்கிறார்:

> "நாட்டுப்பாடல் இலக்கிய ஆய்வாளர் களஆய்வு மேற்கொண்டு இத்துறையில் பெற்ற அனுபவங்களையும் ஆங்காங்கே இவ்வாய்வாளர் புலப்படுத்திச் சென்றுள்ளார். இங்குக் குறிப்பிடாமல் விடப்பட்ட எஞ்சிய இயல்புகளைச் சமயம் வாய்க்கப்பெறும் பொழுது ஆய்வதே ஆய்வாளரின் தனித்தன்மையாகும்'.
>
> "...ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் இதுபோன்ற ஒரு நூல் வெளியானதாகத் தெரியவில்லை'
>
> '—அறிதொறும் அறியாமை காண்' கின்ற நிலையில் மேலும் ஆய்வுக்குத்துணை புரியும் நிலையில் இவ்வாய்வு அமையும் எனக் கருதுகின்றேன்'

18. சொல்லுகின்ற கருத்திற்கு வலிமை தரவேண்டும் என்ற நோக்கில் தேவையற்ற சுட்டுக்களையும் ஒட்டுக்களையும் சேர்க்க வேண்டாம்.

> 'இதுகாறும் கூறிய நால்வகைப் பாவினுள்ளும் அடங்காது யாப்பிலக்கணத்தின் பிற்கால வளர்ச்சியில் வந்துற்ற ஒரு பாவினம் இந்தச் சிந்து'

இத்தொடரில் 'ஒரு' என்ற ஒட்டும், 'இந்த்' என்ற சுட்டும் தேவையற்றவை. இவை இல்லாமலேயே தொடரின் பொருள் தெளிவாகும். 'இந்த' எனச்சுட்டினால் குறிப்பிட்ட ஒரு சிந்து வகையை ஆய்வாளர் குறிக்கிறார் எனத்தவறாகப் பொருள்படும். இதுபோலவே '... என ஒரு சந்தம் அமைந்துள்ளது', '...தனியான ஒரு தாளநயம் தோன்றுகிறது' எனறு, பொருள் இல்லாமலேயே 'ஒரு' எனும்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

19. ஒற்றுப்பிழைகள், சொற்குற்றங்கள், தொடர்ப்பிழைகள், ஒருமைபன்மை மயக்கங்கள் முதலியவற்றை ஆய்வாளர் மிகக் கவனத்துடன் திருத்த வேண்டும். மூன்றாம்படியைக் கருத்துச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செம்மையுடன் எழுதிய பிறகு மேற்கூறிய பிழைகள் உள்ளனவா என ஊன்றிப் பார்த்தல் வேண்டும். கருத்துக்கள் செம்மை யாகவும், புதியனவாகவும் இருந்தாலும் ஆய்வேட்டில் உள்ள பிழைகளுக்காகவே 'மீள்பார்வை' (Revise) செய்யச் சொல்லிப் பல ஆய்வேடுகள் திருப்பியனுப்பப் படுகின்றன. பிழைகள் எங்கு எப்படி எப்போது இடம் பெறும் எனச் சொல்ல முடியாது. கருத்தில் கவனம் செலுத்தும் ஆய்வாளரை அறியாமல் பிழைகள் தாமாகவே வந்து விழுந்துவிடுகின்றன.

20. ஆய்வாளர்களின் விருப்பு வெறுப்புகள் அவர்கள் தேர்ந் தெடுக்கும் தலைப்புகளிலும், எழுதுகின்ற ஆய்வேடுகளிலும் புலனாதல் கூடாது என்று தேர்வாளர்கள் விரும்புகின்றனர். குறிப்பாக நாட்டுப்புற ஆய்வுகளில் சாதி அடிப்படையிலான ஆய்வுகளிலும், சாதிச் சடங்குகள், குலமரபுகள் பற்றிய ஆய்வு களிலும், இத்தகு விருப்பு வெறுப்புகள் வெளிப்படுகின்றன என்று அவர்கள் கருதுகின்றனர். இதனாலேயே சாதி அடிப்படை யிலான ஆய்வுகளை இனிச் செய்யலாகாது என்றும் அத்தகு ஆய்வேடுகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும் கருத் துரைக்கும் தேர்வாளர்களும் உள்ளனர். எனவே சாதி அடிப் படையிலான நாட்டுப்புற ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர் தமது விருப்பு வெறுப்புகள் ஆய்வேட்டில் வெளியாகாதவாறு கவனம் செலுத்த வேண்டும்.

முதற்படி

ஓர் ஆய்வேடு இறுதிவடிவம் பெறுவதற்குமுன் பன்முறை எழுதப்பட வேண்டும். ஓர் இயலை முதலில் எழுதத் தொடங்கும் போது கருத்தில் கவனம் செலுத்த வேண்டும். தாம் புலப்படுத்த எண்ணிய கருத்துக்களை மனதில் இருத்திக் கொண்டு, தேவை யுள்ள இடங்களில் (குறிப்பட்டைகளில் உள்ள) சான்றாதாரங் களைச் சேர்த்து இயலுக்கு முழுமை வடிவம் தருதல் வேண்டும். இன்றியமையாத சான்றுகளை மட்டும் குறிப்பட்டையில் உள்ள வாறு பெயர்த்து எழுதலாம். பிறவற்றை 'இன்னார் குறிப்பர்' என்றோ, பொதுவாக 'என்பர்' என்றோ எழுதலாம். இவற்றிற்கு எண்கள் தந்துவிட்டுக் குறிப்புப் பகுதியில் நூலாசிரியர், நூலின் பதிப்பு விவரம் போன்ற குறிப்புகளைத் தரலாம். சான்றுகள் அளவில் பெரிதாகவோ, சொல்லப்பட்ட கருத்துக்கு நேரடித் தொடர்பின்றியோ இருப்பின், அவற்றைக் குறிப்புப் பகுதியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முழுமையாகக் குறிப்பிடலாம். ஆங்கில மூலமாயின் மொழி பெயர்ப்பைக் கட்டுரைப் பகுதியில் தந்துவிட்டு, மூலத்தைக் குறிப்புப் பகுதியில் தரலாம். ஆய்வேட்டில் பன்முறை இடம் பெறக்கூடிய நூலாசிரியர், நூற்பெயர்களைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். இச்சுருக்கங்களின் விளக்கங்களை ஆய்வேட்டின் முன்பகுதியில் தர வேண்டும்.

ஓர் இயலின் முதற்படியினை எழுதும்போது இத்தனை பக்கங்களிலும் எழுதவேண்டும் என்று முன்கூட்டியே வரையறை செய்துவிட வேண்டாம். ஆய்வாளர் சொல்லக் கருதிய அனைத்துச் சான்றுகளையும் முதற்படியில் எழுதிவிடலாம்; தொடர்பற்றச் செய்திகளையும், மிகைச் சான்றுகளையும் பின்னர் நீக்கிவிடலாம். விரிவாக எழுதியதைச் சுருக்குதல் எளிது; சுருங்க எழுதியதை விரித்தல் அரிது. முதற்படி எழுதும்போது ஓர் இயல் நூறு பக்கங்களுக்கு நீண்டதாயின், மூன்றாம்படியில் இயல் செம்மையடைந்து இறுதிவடிவம் பெறும்போது அறுபது பக்கங்களாகச் சுருங்கும். எனவே இயலை முதலில் விரிவாக எழுதுவதே நல்லது.

ஒவ்வொரு இயலையும் ஏற்கனவே திட்டமிட்டு வைத்துள்ளபடி துணைத் தலைப்பு, உட்தலைப்பு, பத்தித் தலைப்பு என்பனவற்றின் அடிப்படையில் விரித்து எழுதப் பழக வேண்டும். ஒவ்வொரு தலைப்பின் கீழ்வரும் செய்திகளையும் கருத்துக்களையும் தனித்தனித் தாள்களில் எழுதி, பின் அவற்றை ஒன்றாக இணைப்பது ஆய்வை எளிமையாக்கும் ஒரு வழியாகும். இவ்வாறு இணைத்தவற்றை நிரலாகத் தொடர்புபடுத்தி எழுதும் போது இயல் முழுவடிவம் பெற்று விடுகிறது. பெரும்பாலான ஆய்வாளர்கள் முதற்படியை எழுதும்போது தாம் எழுதக் கருதியவற்றுள் ஒரு பகுதியை மட்டுமே எழுதுகின்றனர். அவ்வாறு எழுதும்போதும் தம் மனதில் இருப்பது படிப்போர்க்குத் தெரியும் என்று நினைத்துத் தெளிவின்றி எழுதுகின்றனர். ஆய்வில் தெளிவு மிகவும் இன்றியமையாதது என்பதை ஆய்வாளர்கள் உணரவேண்டும். ஒரு பத்தியை எழுதியபின், அதை ஒருமுறை படித்துப் பார்த்துத் தாம் சொல்லக் கருதியது அப்பகுதியில் முழுமையாகத் தெளிவாகப் புலனாகின்றதா என்று அறிய வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் இயலில் பல முடிவுகள் கூறப்படலாம். நன்கு விவாதித்து, கருத்துகளுக்கு அரண் செய்து ஒரு முடிவை நாட்டிய பின்னர் மீண்டும் அதைப்பற்றி விவாதித்தல் ஆகாது; தாம் அடுத்து நிலைநாட்ட வேண்டிய கருத்தில் ஆய்வாளர் கவனம் செலுத்த வேண்டும். இயலில் கண்ட முடிவுகளை இயலின் இறுதியில்முடிவுகள், முடிவுரை, தொகுப்புஎன்ற ஏதேனும் ஒருதலைப்பில் வரிசை எண்கள் இட்டுத்தர வேண்டும். இயலின் முடிவுரை மீண்டும் ஓர் இயல்போலத் தொடர்தல் கூடாது. ஒவ்வொரு முடிவும் ஓரிரு வரிகளில் மிகச் சுருக்கமாக அமைதல் வேண்டும்.

முதற்படியைத் திருத்துதல்

இயலின் முதற்படியை ஆய்வாளர் மீண்டும் மீண்டும் படித்து ஆங்காங்கே திருத்திக் கொள்ள வேண்டும். முதற் படியைக் குறைந்தது பத்து நாட்கள் இடைவெளி விட்டுத் திருத்துவது நல்லது. முதற்படியில் இடம்பெற்ற செய்திகளும் சான்றுகளும் ஆய்வாளர் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருக்கு மாதலால், எழுதியவுடனேயே திருத்துவது செம்மையாக அமையாது. தம்முடைய எழுத்துக்களைப் 'பொன்குஞ்சுகளா'கக் கருதி ஆய்வாளர் எளிதில் ஒதுக்கித் தள்ள / அடித்துத் திருத்த மனம் ஒப்பார். எனவே முதற்படியில் கண்டுள்ள கருத்துகளின் ஆட்சிச் செல்வாக்குத் தம் மனத்திலிருந்து மறையும்வரை ஆய்வாளர் காத்திருந்து அப்படியைச் செம்மையாக்குவது சிறப்பு.

முதற்படியைச் செம்மையாக்கும்போது துணைத்தலைப்பு, உட்தலைப்பு, பத்தித்தலைப்பு இவற்றிற்கிடையே உள்ள வைப்புமுறை இயைபினை நோக்குதல் வேண்டும். ஒரு பத்திக்கும் அடுத்த பத்திக்கும் தொடர்பு வேண்டும். முதல்பத்தியின் இறுதித் தொடர், அடுத்த பத்திக்குத் தோற்றுவாயாக அமையவேண்டும். பத்தியினுள் உள்ள தொடர்களுக்குள்ளும் இயைபு வேண்டும். பத்தி முழுதும் ஒரே தொடராகவோ, மிக நீண்ட தொடர் களாகவோ, கலவைத் தொடர்களாகவோ ஓர் இயலை உருவாக்குதல் ஆகாது. இவற்றைச் சிறுசிறு தொடர்களாக்கி ஆய்வுக்குத் தெளிவை நல்க வேண்டும். ஒரு பத்தியில் ஒரு கருத்து மட்டும் இடம் பெறுதலே சிறந்தது. தொடராட்சி, நடையாட்சி, சொல்லாட்சித் திறன்களால் இயலைச் செம்மை யாக்குதல் வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்படியைத் திருத்தும்போது வழக்குச் சொற்கள், குறியீட்டுச் சொற்கள், குறியீடுகள், உவமைகள், உணர்ச்சித் தொடர்கள், ஆணைநடை, விளம்பரநடை போல்வன இடம் பெற்றுள்ளனவா எனக் கவனித்து அவற்றை நீக்குதல்வேண்டும். இவைபோன்றே தொடர்ப்பிழைகள், சொற் பிழைகள், ஒற்றுப் பிழைகள், ஒருமை-பன்மை மயக்கங்கள் இவற்றையும் கூர்ந்து கவனித்துக் களைதல் வேண்டும்.

இரண்டாம்படி

ஆய்வேட்டின் இரண்டாம்படியை எழுதும்போது அட்டவணைகள், விளக்கப்படங்கள், வரைபடங்கள், புள்ளி விவரப்படங்கள் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகளைத் தேவையுள்ள இடங்களில் தருதல் வேண்டும். ஆய்வேடுக்கு இறுதிவடிவம் தரும்போது இவற்றை ஒவ்வோர் இயலிலும் உரிய இடங்களில் இணைத்துக் கொள்ளலாம். அதுவரை இவற்றை இயலின் குறிப்புகளை அடுத்து, இணைப்பாக வைத்துக் கொள்ளலாம். ஆய்வு நெறியாளர் இயலைத் திருத்தும்போது இவற்றைப் பார்வையிட இவ்விணைப்பு உதவும். பட்டியல்கள், அட்டவணைகள், இயலினுள் குறிப்பிடப்படும் எண்ணிக்கை விவரங்கள் போன்றவற்றில் உள்ள எண்களின் கூட்டுத் தொகையைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். ஒருமுறைக்கு இருமுறை இவற்றைச் சோதித்தறிய வேண்டும். சான்றாக அகப்பொருள் இலக்கணத்தில் கூறப்படும் வாயில்களின் எண்ணிக்கையைத் தரும்பொழுது, 'தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் என வாயில்கள் பதினொன்று' என்பது போன்று எண்ணிக்கை பிறழ்ந்து குறிப்பிடக்கூடாது. ஆய்வேட்டின் ஒவ்வொரு பகுதியிலும் விழிப்புணர்ச்சி தேவை.

இறுதிப்படி

ஒவ்வோர் இயலையும் செம்மைசெய்து அவ்வப்பொழுது ஆய்வு நெறியாளரிடம் காண்பித்து அவரது ஒப்புதலைப் பெற வேண்டும். இவ்வாறு ஒவ்வோர் இயலும் ஒப்புதல் பெற்று தட்டச்சுக்கு ஆயத்தமாகும் நிலையில் அவை அனைத்தையும் ஒன்றாக இணைத்து இறுதிவடிவம் தருதல் வேண்டும். இதுவே இறுதிப்படி எனப்படுகிறது. இவ் இறுதிப்படியைத் தட்டச்சுக்குத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருவதற்கு முன், முதல் இயல் தொட்டு இறுதி இயல் வரை ஒருமைப்பண்பு இழையோடுகிறதா எனக் கவனிக்க வேண்டும். முன் இயலில் கூறிய செய்திகள் பின் இயலில் 'கூறியது கூறலா'க இடம் பெற்றுள்ளனவா எனக் கண்டறிய வேண்டும். இயல் வைப்பு முறையிலும் இயல்தோறும் சொல்லும் செய்திகளிலும் இயைபும் ஒழுங்கும் உள்ளனவா எனக் காணல் வேண்டும். முதல் இயல் ஆய்வினைத் தொடங்கி வைப்பதாகவும் இறுதி இயல் அவ்வாய்வினை முடித்துவைப்பதாகவும் அமைந்துள்ளனவா என அறிதல் வேண்டும்.

ஆய்வேட்டின் முழுமையைக் கண்டறிந்தபின் முன்னுரையையும் முடிவுரையையும் எழுதிச் சேர்க்க வேண்டும். முன்னுரையில் கூறப்பட்ட ஆய்வின் நோக்கம் நிறைவேறியுள்ளதாக இயல்கள் அமைந்திருத்தல் வேண்டும். முன்னுரையில் குறித்துள்ளபடி ஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும். முன்னுரையில் எழுப்பப்பட்ட சிக்கல் / சிக்கல்களுக்கு விடை காண்பதாக ஆய்வேடு அமைய வேண்டும். இயல்தோறும் குறிப்பிட்ட முடிவுகளை, முடிவுரையில் வகுத்தும் தொகுத்தும் தருதல் வேண்டும் இம்முடிவுகளும் சுருக்கமாக, முன்னுரையில் கூறப்பட்ட சிக்கல்/சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதாக இருத்தல் வேண்டும். இயல்களுக்குள்ளே இயைபு இருப்பது போன்று முன்னுரைக்கும் முடிவுரைக்கும் இயைபு வேண்டும். முன்னுரையில் எதையோ கூறவந்து, முடிவுரையில் எதையோ கூறி முடிப்பதாகத் தொடர்பற்றத் தன்மை கூடாது.

ஆய்வேட்டின் பக்க எண்களைத் தொடர்ச்சியாகத் தரும் பணியை இந்நிலையில் தொடங்கலாம். சிலர் பக்க எண்களை முன்னுரையிலிருந்து முடிவுரை வரை தொடர்ச்சியாகத் தருவர். வேறு சிலர் முன்னுரைக்கு உரோமன் எண்களும், முதல் இயலிலிருந்து முடிவுரை வரை தொடர் எண்களும் தருவர் ஆய்வேட்டிற்குப் பக்க எண்கள் தரும்போது குறிப்புகள் இடம் பெற்ற பகுதிகளுக்குத் தனி எண்கள் தருவதுண்டு. குறிப்புகள் நிரம்பவரின் இம்முறையைப் பின்பற்றலாம். சில ஆய்வேடுகளில் ஒவ்வொரு இயலிலும் குறிப்புகள் இருபது பக்கங்களுக்கு மேல் நீள்கின்றன ஆய்வேட்டின் மொத்தப் பக்கங்கள் நானூறு என்றால், குறிப்புகளே நூற்று ஐம்பது பக்கங்களுக்கும் மேல் இடம்பெறும் ஆய்வேடுகளும் உருவாகின்றன. இதுபோன்ற நிலைகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வின் பொருட்பகுதியை அறிந்துகொள்ள இம்முறை உதவு கின்றது. இம்முறையின்படி ஓர் இயல் 154ம் பக்கத்தில் முடிவடைந்து, அடுத்த பக்கத்திலிருந்து குறிப்புகள் தொடங்கு கின்றன என்றால் 154.1, 154.2, 154.3 ...154. .41 என்று குறிப்புப் பகுதிக்கு எண்கள் தரப்படுகின்றன.[16] அடுத்த இயல் 155ம் பக்கத்திலிருந்து தொடங்குகின்றது.

ஒவ்வோர் இயலின் முன்பும், அந்த இயலில் என்ன சொல்லியிருக்கிறோம் என்பதைத் துணைத் தலைப்புகள் இட்டுக் காட்ட வேண்டும். இஃது இயலுக்குரிய பொருளடக்க மாகும்[17]. இப்பகுதியில் இயலின் தலைப்பு அமையும். இதற்கு அடுத்தாற்போல் இடம்பெறும் இயல்நுவல் பகுதி இயலின் தலைப்பை இடாமல், இயல் 4, இயல் 5 — என்றவாறு இயல் எண்கள் இட்டுத் தொடங்கும். ஒவ்வோர் இயலும்,

1. இயல் பொருளடக்கம்
2. இயல் நுவல்பொருள்
3. முடிவுரை
4. குறிப்புகள்

என்ற நாற்பகுதிகளாக அமையும். இவ்வாறு அமைந்த பல இயல்கள் இணைந்தும், முன்னுரை, முடிவுரை, பின்னிணைப்பு கள் சேர்ந்தும் ஓர் ஆய்வேடு வடிவம் பெறுகின்றது.

11. துணைநூற்பட்டியல் ஒவ்வொரு இயலுக்குப் பின்னரும் குறிப்பு களைத் தரும்பொழுது ஆசிரியர் பெயர், நூற்பெயர், பக்கம் முதலிய விவரங்களைத் தருகிறோம். ஆனால் ஆய்வாளர் அந் நூலைப் பார்த்துப் பயன்படுத்தியிருக்கிறார் என அறிவதற்கு இவ்விவரங்கள் போதா. பதிப்பகத்தின் பெயர், நூல் வெளியான ஆண்டு, பதிப்பு விவரம்(மறுபதிப்பு, திருத்தியபதிப்பு போன்றவை உள்பட) முதலிய குறிப்புகளும் தேவை. இவற்றைத் துணை நூற்பட்டியல் பகுதியில் தரலாம்.

(எ-டு) *இராமலிங்கம், மா., விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச்சிறுகதை கள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை 5, 1977.*

பரந்தாமனார், அ. கி., நல்லதமிழ் எழுதவேண்டுமா? பாரி நிலையம், சென்னை, எட்டாம்பதிப்பு, 1988.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணைநூற்பட்டியலைப் பின்வரும் தலைப்புகளில் வகைப் படுத்தித் தருவது தெளிவை நல்கும் :

I தமிழ் :

i) நூல்கள்
ii) கட்டுரைகள்
iii) ஆய்வேடுகள்
iv) இதழ்கள்
v) கலைக்களஞ்சியம், அகராதி போல்வன.

II ஆங்கிலம்

i) Books
ii) Articles
iii) Journals
iv) Encyclopedias and Dictionaries.

12. பின்னிணைப்புகள் ஆய்வாளரின்உழைப்பைப்பின்னிணைப்புப் பகுதி வெளிப்படுத்த வல்லது. எனவே ஆய்வேட்டின் முற்பகுதியில் ஆய்வேட்டில் இடம்பெற்றுள்ள பின்னிணைப்புகளின் பட்டியலைத் தருதல் வேண்டும். பேட்டி, வினாநிரல், ஒளிப் படங்கள் (Photos) ஒளியச்சுப்படங்கள் (Xerox Copies), ஆய்வுக் களத்தின் வரைபடங்கள், ஆய்வின்போது தொகுக்கப்பட்ட நாட்டுப்புறப்பாடல்கள் போன்றவற்றைப் பின்னிணைப்பு களாகத் தரலாம்.

(எ-டு) பின்னிணைப்புகள்[18]

1. கச்சியப்ப முனிவரின் வாழ்க்கை வரலாறு
2. தணிகைப் புராணத்தில் பயின்றுள்ள சில சிறப்பு உவமைகள்
3. தணிகைப் புராணத்தில் பயின்றுள்ள அணிகள்
4. தணிகைப் புராணத்தில் பயின்றுள்ள யாப்புவகை
5. திருமுருகனின் திருவுருவங்கள்
6. தணிகைப் புராணத்தில் பயின்றுள்ள புராணச் செய்திகள்
7. தணிகைப் புராணத்தில் அமைந்த கதைகள்
8. தணிகைக்குரிய வேறு பெயர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தலங்கள்
10. திருத்தணிகையைப் போற்றும் இலக்கியங்கள்
11. தமிழ்த் தலபுராணங்கள்—ஒரு தொகுப்பு

13. **கலைச்சொல்நிரல் :** இதழியல், ஒப்பிலக்கியம், உளவியல், சமூகவியல் போன்ற தமிழோடு உறவுடைய, தமிழ்சார்ந்த துறைகளில் ஆய்வுகளை நிகழ்த்தும்போது, ஆய்வின் பொருட் பகுதியில் பல கலைச்சொற்கள் பயின்று வருவதுண்டு. நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வின்போது தொழிற்களச் சொற் கள், வட்டார வழக்குச்சொற்கள் போன்றவற்றிற்கு விளக்கங்கள் தர நேரிடும். இத்தகுக் கலைச்சொற்களை நிரல்படுத்தி ஆய்வேட்டின் இறுதியில் தரலாம். பின்னிணைப்புகளில் ஒன்றாகவும் கலைச்சொல்நிரலைத் தருவதுண்டு.

(எ-டு) **கலைச்சொல்நிரல்**[19]

இவ்வாய்வின் முதலிரண்டு இயல்களில்இடம்பெற்றுள்ள இலக்கியவகை பற்றிய கலைச்சொற்கள் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இலக்கிய மூலக்கூறு	...	Generic element 2-4, 7
இலக்கிய வகை	...	Genre 2, 4, 5, 7
இலக்கிய வகைமை	...	Generic Complex 2, 7
இலக்கிய வகைகளின்		
தோற்றம்	...	germination,
மலர்ச்சி	...	expansion,
தொடர்ச்சி	...	effloresance,
தளர்ச்சி	...	decay ... 17
கருத்துத்திறனாய்வு	...	interpretation,
மீட்டுருவாக்கம்	...	reconstruction 33
இலக்கியப்பகுப்பு	...	type,
இலக்கியப்பிரிவு	...	class,
இலக்கிய இனம்	...	kind — 33
உயிரினங்களின் வளர்ச்சி		
முகிழ்நிலை	...	lag phase,
பல்குநிலை	...	log phase,
சமன்நிலை	...	stationary phase,
தளர்நிலை	...	decline phase—22

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புகள்

1. வளன் அரசு, பா., தேம்பாவணித் திறன், மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, செப்டம்பர் 1984.

2. தமிழ்க்குடிமகன், மு., பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1967-1976), மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1982.

3. பாலுசாமி, ந., கம்பராமாயணத்தில் தம்பியர் நிலை, மதுரை காமராசர் பல்கலைக் கழக முனைவர் பட்ட ஆய்வேடு, சூலை 1980.

4. Radha Thiyagarajan, A Study of Mysticism in Tiruvacakam, Doctoral Thesis submitted to Madurai University, 1972.

5. திருமலை, ம., ஜெயகாந்தன் — தகழி சிவசங்கரன் பிள்ளை நாவல்கள் ஓர் ஒப்பாய்வு, மதுரை காமராசர் பல்கலைக் கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1980.

6. அருணகிரி, மு., தமிழ் இலக்கியத்தில் அங்கதம், மதுரை காமராசர் பல்கலைக் கழக முனைவர்பட்ட ஆய்வேடு, 1985

7. தமிழ்க் குடிமகன், மு., 'பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்', 1982

8. கனகசபாபதி, சி., பாரதி—பாரதிதாசன் : ஒப்பிலக்கிய ஆய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு. 1976.

9. Shanmugam, R. A Frequency Word List for Modern Tamil, Ph. D. Thesis, Oct. 1973.

10. மகாதேவன், மேஜர் கதிர், பழந்தமிழர் வீரநிலைக்காலப் பண்பாடு, மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1979.

11. Jayachandrun, A. V., The Madurai Temple Complex with special reference to Literatures and Legends, PhD Thesis, Nov. 1979.

12. மெய்கண்டான், சி., "பில்கணீயமும் புரட்சிக்கவியும் ஓர் ஒப்பாய்வு", பாரதிதாசன் பல்கலைக்கழக எம்ஃபில் ஆய்வேடு, சனவரி 1988.

8140

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13. இராசா, கி., தொல்காப்பியமும் இலக்கிய வகைமை வளர்ச்சியும் மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு 1986.

14. இராமசாமி, இ. கி., தமிழில் பாயிரங்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு.

15. அறவாணன், க. ப., தொல்காப்பிய அகத்திணை, புறத்திணை இயல் உரை வேறுபாடுகள்—ஒரு திறனாய்வு, சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1977.

16. காஞ்சனா, இரா., அறிவியல் நோக்கில் தமிழிலக்கியத்தில் நிலையியல் உயிர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர்பட்ட ஆய்வேடு, 1986

17. காண்க, குறிப்பு 14.

18. மருததுரை, அரு., தணிகைப்புராணம்—ஓர் ஆய்வு, திருவேங்கடவன் பல்கலைக்கழக முனைவர்பட்ட ஆய்வேடு 1982.

19. இராசா, கி., தொல்காப்பியமும் இலக்கிய வகைமை வளர்ச்சியும் 1986

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the Compliments of the Department of Education, Government of India, New Delhi.

தட்டச்சுக் குறிப்புகள்

கையெழுத்துப் பிரதியைத் தட்டச்சு செய்யும்போது பல தவறுகள் நேரிட வாய்ப்புகள் உள்ளன. எனவே கையெழுத்துப் பிரதியை முதலில் மாதிரிப்படியாகத் தட்டச்சு செய்து கொள்ள வேண்டும். இப்படியில் நேர்ந்த பிழைகளை நீக்கி செம்மைப் படியை (Fair Copy) உருவாக்க வேண்டும்.

பெரும்பான்மையும் மாதிரிப்படியைப் போன்றே செம்மைப் படியும் இருக்குமாதலால் மாதிரிப்படியைச் செம்மைப்படி எனக் கருதியே தட்டச்சு செய்தல் வேண்டும். மாதிரிப்படி தட்டச்சு செய்வதற்கு சாதாரண A4($8\frac{1}{2}$" × 11")அளவுத்தாள் போதுமானது. தாளின் ஒரு பக்கம் மட்டும் தட்டச்சு செய்தல் வேண்டும். தாளின் மேல், கீழ், இடது ஓரங்களில் 20 மி மீட்டரும் வலது ஓரம் பைண்டிங் செய்வதற்கும் சேர்த்து 40 மி. மீட்டரும் வெற்றிடம் விட வேண்டும்.

இயல் தொடங்கும்போது, தாளின் மேற்பகுதியிலிருந்து 40 மி. மீ. இடைவெளி விட்டு, இயல் தலைப்பை மையமாக்கித் தட்டச்சு செய்ய வேண்டும். இயல் தலைப்பிலிருந்து மூன்று வரிகள் இடைவெளிவிட்டுக் கட்டுரைப் பகுதியைத் தொடங்க வேண்டும். ஒரு பத்திக்கும் மற்றொரு பத்திக்கும் இடையே நான்கு வரிகள் இடைவெளி தேவை. பத்தியைத் தொடங்கும் முன் ஐந்து அலகுகள் முன் இடம் விட்டுத் தொடங்க வேண்டும். கட்டுரையில் ஒரு வரிக்கும் அடுத்த வரிக்கும் இடையில் 2வரிகள் இடைவெளி தேவை. மேற்கோள்களைத் தனித்துக் காட்டு வதற்காக, அவற்றைக் கட்டுரைப் பகுதியிலிருந்து நான்குவரிகள் இடைவெளி விட்டுத் தொடங்க வேண்டும். மேற்கோள் வரி களுக்கிடையில் ஒரு வரி இடைவெளி போதுமானது. மேற் கோள் பகுதியை வலதுபக்கத்தில் 60 மி. மீ. ஓரம் விட்டுத் தொடங்க வேண்டும். இப்படி அமைந்த மேற்கோள் பகுதி எடுப்பாகத் தோன்றும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல்களைத் தட்டச்சு செய்யும்போது பாடலடிகள் அனைத்தும் ஒரே பக்கத்தில் இடம் பெறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பத்து அடிகள் கொண்ட பாடலாயின் ஒரு பக்கத்தில் ஐந்து அடிகளையும் அடுத்த பக்கத்தில் மீதி ஐந்து அடிகளையும் பிரித்துத் தட்டச்சு செய்வதைத் தவிர்க்க வேண்டும். பாடலடிகளுக்கு இடையில் ஒரு வரி இடைவெளி விட்டு, பாடலின் வலதுபுறமும், இடதுபுறமும் சமமான ஓரம் விட்டு நடுவில் தட்டச்சுச் செய்தல் வேண்டும்.

ஒரு பக்கம் முழுவதும் தட்டச்சு செய்தபின், ஒரு வரிக்கு மட்டும் அங்கு இடமிருக்குமாயின், புதிய பத்தியைத் தொடங்க வேண்டாம். அடுத்த பக்கத்தில் புதிய பத்தியைத் தொடங்கவும். சொற்களைப் பிரித்துத் தட்டச்சுச் செய்வதை இயன்றவரையில் தவிர்க்கவும். ஒரு வரியின் இறுதியில் சொல்லைப் பிரிக்க நேர்ந்தால் பிரித்த சொல்லின் இறுதியில் — என்று கோடிட்டு அடுத்த வரியில் தொடரவும். சொற்களைப் பிரித்துத் தட்டச்சுச் செய்யும் போது இலக்கண விதிகளை மனதிற் கொள்ளவும்,

முதற்படியில் கண்டுள்ள பிழைகளைத் திருத்தியபின் செம்மைப்படியைத்தட்டச்சுச் செய்ய வேண்டும். தற்போதுதட்டச்சுப். படியிலிருந்து வேண்டியஅளவு ஒளியச்சுப்படிகள் (Xerox) எடுக்கப்படுகின்றன. எனவே தாளில் மை பரவாமல் இருந்தால், ஒளியச்சுப்படிகள் சிறப்பாக உருவாகும். இதற்கு மை பரவாத (medium inked black ribbon) தட்டச்சு நாடா உகந்தது. தட்டச்சுச் செய்வதற்கு 20-22 பவுண்டு எடையுள்ள A4 அளவு பாண்டுத்தாளைப் பயன்படுத்த வேண்டும் செம்மைப்படிகள் இரண்டு (1+1)எடுப்பது நல்லது. முதற்படியை வேண்டிய அளவு ஒளியச்சுப்படிகள் எடுத்துவிட்டு பைண்டு செய்து வைத்துக் கொள்ளலாம். இரண்டாம் படியை உதிரித்தாட்களாக வைத்துக் கொண்டு, பின்னாளில் நூலாக வெளியிடப் பயன்படுத்தலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வு நெறிமுறை நூல்கள்

தமிழ்

1. சதாசிவம், ஆ., ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம், 1963.

2. சிதம்பரநாதபிள்ளை, வே., ஆய்வியல் நெறிமுறைகள், தெ. தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில், 1987.

3. சுப்பிரமணியன், ச. வே.,(பதிப்.) ஆராய்ச்சிநெறிமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

4. ஞானப்பிரகாசம், சி., ஆராய்ச்சி முறையியல், அறிவுச் சுடர் நிலையம், பூசாரிபட்டி, கோவில்பட்டி, 1979.

5. தமிழண்ணல், இலக்குமணன் எம். எஸ்., ஆய்வியல் அறிமுகம், ஏரக வெளியீடு, மதுரை, 1977.

6. தமிழண்ணல், இலக்குமணன், எம். எஸ்., மோகன், இரா., ஆய்வியல் வழிகாட்டி, ஏரக வெளியீடு, மதுரை, 1979.

7. பொன்னுசாமி, மு., ஆராய்ச்சி முறையியல்—ஓர் அறிமுகம், கலா பதிப்பகம், கோயமுத்தூர், 1979.

8. முத்துச்சண்முகன், வேங்கடராமன், சு., ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1976.

9. முத்துச்சண்முகன், வேங்கடராமன், சு, இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், முத்துப்பதிப்பகம், மதுரை, 1980.

10. விசுவநாதன், ஈ. சா., ஆய்வு நெறிமுறைகள், க்ரியா சென்னை, 1976.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலம் :

1. Almack, John C, Research and Thesis Writing, Houghton Mifflin Company, Boston, 1952.
2. Cates, Jean Key, Guide to the Use of Books and Libraries, Mc-Graw Hill, New york, 1969.
3. Good, C. V. and Scates, D.E., Methods of Research, Appleton—Century Crofts, New york, 1954.
4. Good, W. J., and Hatt, P. F., Methods in Social Research Mc-Graw Hill Book Co., New york, 1952.
5. Hook, L., and Gaver, M.V., Research Paper, Prentice—Hall, New york, 1969.
6. Hutchinson, Helene, D., Guide to Writing Research Papers, Glencoe Press, New york, 1973.
7. Iverson, M. R., The Research Paper Simplified, Prentice—Hall (India) Pvt. Ltd., New Delhi, 1970.
8. Parsons, C.J. Thesis and Project Work, George Allen and Unwin Ltd., London, 1973.
9. Turbian, Kate L.A., Manual for Writers (Term Papers, Theses and Dessertations), University of Chicago Press, 1931.
10. Whitney, F.L., Elements of Research, Asia Publishing House, Bombay, 1961.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்த்திபன் பதிப்பக வெளியீடுகள்

இதழியல்	ரூ. 18
இலக்கிய வகைமை ஒப்பாய்வு	ரூ. 20
ஒப்பிலக்கிய நோக்கு	ரூ. 7
அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி	ரூ. 10
புதுமைப்பித்தன் கதை மாந்தர்	ரூ. 12
பாரதி கண்ணீர்	ரூ. 3
நூல் வெளியீடு	(அச்சில்)
டாக்டர் கி. இராசா	
இலக்கிய நயம் — டாக்டர் இரா. மோகன்	ரூ. 12
தெலுங்கு இலக்கிய வரலாறு — டாக்டர் டி. எஸ். கிரிபிரகாஷ், பா. ஆனந்தகுமார்	ரூ. 25
தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை — டாக்டர் சிவ. சசிரேகா	ரூ. 25
மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள் — தே. ஞானசேகரன்	ரூ. 12
நாட்டுப் புறவியல் சிந்தனைகள் — ச. முருகானந்தம்	ரூ. 12
சட்டம் சந்தித்த பெண்கள் — நெல்லை கவிநேசன்	ரூ. 12
கண்மணிகளுக்குக் கவிமணி — சித்தார்த்தன்	ரூ. 10
விளம்பரத்தொழில் — எஸ். கிருஷ்ணன்	ரூ. 50

8140

पुस्तकालय गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



RESEARCH METHODOLOGY

ஆய்வேட்டை எழுதும்போது ஆய்வாளர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை அறிந்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆய்வேட்டின் அனைத்துப் பகுதிகளும் இந்நூலில் சான்றுகளுடன் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. இந்நூலில் கண்டுள்ள குறிப்புகளை மனதில் கொண்டால் ஆய்வுச்சுமை பெருமளவில் குறையும். ஆய்வாளர்களுக்கு இந்நூல் ஓர் உற்றதுணை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar